# யாழ்நாதம்

இதழ் 11

2005



புகழ்பூத்த மாணவி சற்சொரூபவதியின்
40 வருட ஒலிபரப்புச் சேவைத் திறனைக் கௌரவிக்கும்
இணைப்பிதழ் இத்துடன் ...



வெளியீடு:
'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பப் பாடசாலை வெள்ளிவிழாவின் போது சிறப்பு அதிதியாகச் சென்ற எங்கள் சங்கத்தின் உபபொருளாளர் திருமதி விமலா மணிவாசகன் மங்கல விளக்கேற்றுகின்றார்.

குறிப்பு : பக்கம் 41, பக்கம் 55

ஆரம்பப் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி. திருமதி விமலா மணிவாசகன் பரிசு கொடுத்த மாணவிகளுடன் .

குறிப்பு : பக்கம் 55





அரட்டை அரங்கம். செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்.

குறிப்பு : பக்கம் 32-36, பக்கம் 59.

செல்வி நாகநந்தினி சண்முகநாதன், திருமதி தயாநிதி உதயகுமார், திருமதி விமலா மணிவாசகன், திருமதி சந்திரா பரமேஸ்வரன்.

குறிப்பு : பக்கம் 32-36, பக்கம் 59.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நாதம்

வெளியீடு –
'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு'

இதழ் 11 2005

உள்ளே. . . .


| | | | |
|---|---|---|---|
| 2 | பிறர் துயர் துடைத்தல் | 27 | 108 மங்களாசாசன திவ்விய தேசங்கள் |
| 3 | வளர்ச்சியில். . . . | 31 | அணில் குஞ்சு |
| 4 | தாயன்பு | 32 | அரட்டை அரங்கம் |
| 8 | நான்கு புண்ணிய ஸ்தல யாத்திரை | 38 | Do you know/Amazing facts |
| 10 | காசி காசிதான் | 40 | திருமதி தையல்நாயகி கருணானந்தன் |
| 12 | துள்ளாத மனமும் துள்ளும் | 41 | வெள்ளி விழா–ஆரம்பப் பாடசாலை |
| 14 | ஈரோடு பேன்வாங்கி | 43 | Spider Warning |
| 17 | மூளைச்சாவு முழு விவரங்கள் | 45 | திருக்கேதீஸ்வரத்து திருவாசக மடம். |
| 19 | சின்னஞ் சிறு முருகன் | 47 | பிறந்த நாள் வாழ்த்து |
| 20 | தொண்டீஸ்வரம் | 49 | என்னுடைய இந்த வெற்றிக்கு . . . |
| 24 | ஒழுக்கம் | 51 | இந்து சமயத்தில் சிவன் |
| 25 | Some useful advice | 53 | பதினோராம் ஆண்டு அறிக்கை |


**"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்"**

**"It ought to be beautiful, I live here"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர் துயர் துடைத்தல்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எங்கள் கல்லூரியில் நாம் கற்ற நற் பண்புகளில் ஒன்று பிறர் துயர் துடைத்தல். மற்றவர்கள் துயரை எமது துயர் போலக் கருதி அவர்கள் துயரைக் களையவேண்டும் என அறிவிற் சிறந்த எங்கள் ஆசிரியைகள் எமக்குப் போதித்து இருக்கிறார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி (26.12.2004) boxing day அன்று நடந்த சுனாமியின் கொடிய தாக்கத்தினால் பல்லாயிரக் கணக்கானோர். இறந்தும், பலர் உற்றார், உறவினர், நண்பர்கள், வீடு வாசல்கள் முதலிய எல்லாவற்றையுமோ அல்லது சிலவற்றையோ இழந்தும் உள்ளார்கள்.

சுனாமி அனர்த்தத்திலிருந்து உயிர் தப்பி தவிக்கும் எம் சகோதர சகோதரிகளுக்கு உதவுதலில் எங்கள் சங்க அங்கத்தவர்கள் தனிப்பட்ட முறையிலும், பிற நிறுவனங்களுடன் சேர்ந்தும் காட்டி வரும் ஆர்வம் போற்றற்குரியது.

முக்கியமாக சிறந்த சமூகசேவகியாகிய எங்கள் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை இரவு பகல் பார்க்காது, ஊண் உறக்கம் கருதாமல் அளப்பெரும் சேவை ஆற்றி வருகிறார். இவரின் அரும்பணி தொடர இறைவன் இவரைச் சுகதேகியாக பல்லாண்டு வாழவைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்"

எங்கள் சங்கத்தின் சார்பில் இயற்கையின் சீற்றமாகிய சுனாமியினால் சேதமுற்ற ஒரு கல்லூரிக்கு உதவவேண்டும் என்பது எமது அவாவாகும்.

வழமைபோல் யூனிஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் அழகுற எமது சஞ்சிகை அட்டையை அமைத்ததற்கு நன்றி கூறுகின்றோம்.

*61/2, Abdul Gaffoor Mawatha*
*Colombo 3*

*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*மலர் ஆசிரியை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வளர்ச்சியில்..........

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, *1943* ஆம் ஆண்டில், இந்து சமயச் சூழலில் எமது சமயம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எமது சிறுமிகள் சிறந்த கல்வி பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டது.

கடந்த *60* ஆண்டுகளாக இந்நோக்கத்தைச் சிறந்த முறையில் நிறைவேற்றி எமது கல்லூரி வளர்ச்சியடைந்து வருகிறது. இதற்குத் துணை செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள் ஆகிய சகலருக்கும் எமது நன்றி உரியது.

*1993* ஆம் ஆண்டு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா ஆண்டாகும். அந்த ஆண்டில், கொழும்பில் வாசம் செய்யும் எமது கல்லூரியின் பழைய மாணவிகள், யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக்கிளையினை அமைத்தனர். அதே ஆண்டில், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் பழைய மாணவிகள் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

கொழும்புக்கிளையினரால் "யாழ் நாதம்" என்னும் சஞ்சிகையின் முதலாவது இதழ் *1995* இல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து சென்ற பத்து ஆண்டுகளாக வருடாந்த சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. எமது சங்க அங்கத்தவரின் அறிவு வெளிப்பாட்டுக்களமாகவும், சங்க நடவடிக்கைகளின் ஆவணப் பதிவேடாகவும் இச்சஞ்சிகை விளங்கி வருகிறது.

எங்கள் கல்லூரி தனது வைரவிழாவைக் கொண்டாடிய போது எமது சங்கம் பத்தாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. எமது கல்லூரியின் முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், தொடர்ந்தும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வதற்கு இறைவனின் அருளை வேண்டுகின்றேன்.

"யாழ் நாதம்" சஞ்சிகை மேலும் சிறப்பாகத் தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

*திருமதி. அ. கயிலாசபிள்ளை*
*தலைவி*
*பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தாயன்பு

நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கின்றார்கள். தந்தை அன்பு செய்கின்றார் மனைவி அன்பு செய்கின்றாள். மகன் அன்பு செய்கின்றான் உடன் பிறந்தார்கள் அன்பு செய்கின்றார்கள் ஆனால் தாய் செய்கின்ற அன்புதான் தலையாய அன்பு.

தாயன்புக்கு நிகரானது வேறு எதுவும் கிடையாது. தாய் நம்மை முன்னூறு நாள் சுமந்து, அங்கமெல்லாம் நொந்து பெறுகின்றாள். தன் உதிரத்தை பாலாக மாற்றித் தருகின்றாள். கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்க்கின்றாள்.

நமக்கு இரண்டு தாயார் உண்டு. ஒன்று பெற்றதாய் மற்றொருதாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள்: இந்த பிறப்புக்கு மட்டும் தாய்.

இறைவன் பிறவிகள் தோறும் நமக்கு உதவுகின்ற தாய், அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

"தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"
"தாயில் சிறந்த தயாவான தத்துவனே"
"எவ்வுயிர்க்குந் தாயானானை" - பெரிய புராணம்
"எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ" - கந்தரநுபூதி

நம் தாயாரைத் தங்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும் தேனும் ஊட்டி, மலர் மாலை சூட்டி வழிபட்டாலும், தாயார் நம்மை ஒருநாள் வளர்த்ததற்கு இணையாகாது.

சந்நியாசம் பெற்ற ஒருவனைக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்காதிருந்தால் தந்தைக்கு நரகம், சந்நியாசம் பெற்ற ஒருவன் தாயாரைக் கண்டு நிலத்தில் வீழ்கவில்லையானால் அந்த சந்நியாசி நரகத்தை அடைவான்.

பற்றற்ற பரம ஞானியும் தாயாரைப் போற்றவேண்டும். சந்நியாசம் பெற்ற ஆதிசங்கரரும், பட்டினத்து சுவாமிகளும் தாயாருக்குத் தகனகிரியை செய்தார்கள்.

தாய்தான் சிறந்த தெய்வம், தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள் என்று யட்சப்ரச்னை கூறுகின்றது. "ஈன்றாளில் என்ன கடவுளும் இல்லை" என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மணிக்கடிகை. இத்தகைய தாயன்பை அடியிற்கண்ட வரலாறு இனிது விளக்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்துவானாகப் பேரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்பும் எய்தி “ஸ்ரீ ஹீரன்” (ஸ்ரீ ஹீரன்) என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரச சபையில் சூரியனைப் போல் விளங்கினார். அவருடைய வாக்கின் வன்மையைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்கு பல விருதுகள் வழங்கினார்.

ஒரு நாள் அயல் நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். கையில் யாளிமுகத் தோடாவும், வைரக் கடுக்கனும், நவரத்தின மோதிரங்களும், பொற் சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன் சீடர்கள் பலர் சூழ மிடுக்குடன் தோற்றமளித்தான்.

அப்புலவனுக்கும் ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. அதில் ஸ்ரீ ஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு சிந்தாமணி என்ற மகா மந்திரம் தெரியும். அம் மந்திரம் சரஸ்வதிக்கு உரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடு இரவில் பிணத்தின்மீது அமர்ந்து அச்சம் இன்றி பன்னிரெண்டு நிமிஷம் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். அவருக்கு ஸ்ரீ ஹர்ஷன் (ஸ்ரீ ஹர்ஷன்) என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது.

அந்த மந்திரத்தை அந்தச் சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்கக் கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன் மனைவி மாமல்லதேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

“பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச்சிறந்த அருமையும் பெருமையும் உடையது. இதனை நமது மகன் ஸ்ரீ ஹர்ஷனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம் மந்திரத்தை பயபக்தியுடன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின் மீது அமர்ந்து சிறிதும் அச்சமும் அருவருப்பும் இன்றி பன்னிரண்டு நிமிஷங்கள் ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இது கிடைத்தற்கரிய அரிய பொக்கிஷம். இதனை மகனிடம் ஒப்புவிக்கவேண்டும்” என்று கூறினார்.

பின்னர் “மானம் இழந்த பின் வாழாமை முன் இனிது” என்ற வாக்கின்படி அவர் உயிர் துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவனாருடைய பிரிவைக் குறித்துப் பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர் தாங்கிக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்தாள். அம் மந்திரத்தை சதா உச்சரிக்கும் பயிற்சியை அக் குழந்தைக்குத் தந்தாள். தன் மகன் பன்னிரெண்டு ஆண்டுகள் ஜெபித்தால் தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதி விரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒரு நாள் இரவு 15 நாளிகை நள்ளிரவு. தன் வீட்டுக் கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக் கொண்டாள். மகனை மார்பு மீது வைத்துக் கொண்டாள். கண்ணா உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக் கொண்டே இரு. அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு நிரம்ப பட்சணம் தருவேன். விளையாட்டுச் சாமான் வாங்கித் தருவேன்" என்றாள். அவள் இட்ட திட்டத்தை குழந்தை அறியாதுதானே? தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தான்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்பே படுக்கைக்குள் ஆயத்தமாக வைத்திருந்த வடிவாளை எடுத்துத் தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள். குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருந்தது. நள்ளிரவில் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததால் கலைமகள் அன்ன வாகனத்தில் தோன்றி ஆயிரம் சந்திரோதயம் போல் காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியை குழந்தை தரிசித்தது. அதே நேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. இந்தத் தாயை நோக்கி அழுவதா? அந்தத் தாயை நோக்கித் தொழுவதா? எனறு எண்ணித் திகைத்தது.

கலைமகள் அக் குழந்தைக்குப் பூர்ணமான அருளை வழங்கி கலை ஞானத்தை தந்தருளினாள். ஸ்ரீ ஹர்ஷன் கலைமகளை நோக்கி "அம்மா! என் தாய் பிழைக்க அருள் செய்" என்று தொழுது அழுது வேண்டினான். வாணிதேவி அருள்புரிந்தாள். மாமல்லதேவி உயிர்பெற்று எழுந்தாள்.

ஸ்ரீ ஹர்ஷன் வடமொழியில் பெரும் புலவராக விளங்கினார். இவர் நளனுடைய சரிதத்தை 'நைஷதம்" (நைஷதம்) என்ற நூலாகப் பாடினார். அது மிகவும் கடினமாக எளிதில் பொருள் விளங்காதபடி இருந்தது. அக் காலத்திலிருந்த புலவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஸ்ரீ ஹர்ஷனுடைய அறிவு மிகவும் கூர்மையாக இருந்தது. அவரால் எளிமையாக பாட இயலவில்லை. புலவர்கள் அவரைப் பார்த்துத் "தங்களுடைய அறிவின் கூர்மை சிறிது மழுங்க வேண்டும். அப்படி மழுங்குவதற்கு நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து கொள்ளவேண்டும். மாமனார் வீட்டில் சிலகாலம் இருக்கவேண்டும். காலையில் எருமைத்தயிர் அன்னம் சாப்பிடவேண்டும். அவரைப் பந்தலின் கீழ் இருக்க வேண்டும்" என்று கூறினார்கள்.

ஸ்ரீ ஹர்ஷன் இவற்றை இவ்வாறு செய்து அறிவின் கூர்மையை மழுக்கிக் கொண்டு இரண்டாவது முறையாக நைஷதத்தைப் பாடினார். அப்படி பாடிய நைஷதமே மிகவுயர்ந்த காவியமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. 'நைஷதம் புலவருக்கு ஒளஷதம்' என்று பழமொழி.

இந்த வரலாற்றினால் தாயன்பு நன்கு புலனாகிறது. தன் மகனுக்காகத் தாய் தன்னையே தியாகம் செய்து கொண்டாள்.

T. அருள்நந்தி வெளியிட்ட "வாரியாரின் அமுதமொழி" என்ற நூலிலிருந்து பிரதி பண்ணியது.

திருமதி திலகவதி வீரசிங்கம்.

## A Smile

A smile costs nothing, but gives much. It enriches those who receive, without making poorer those who give. It takes a moment, but the memory of it sometimes lasts forever. None is so rich or mighty that he can get along without, and none is so poor but that he can be made rich by it.

A smile creates happiness in the home, fosters goodwill in business, and is the counter sign of friendship. It brings rest to the weary, cheer to the discouraged, sunshine to the sad, and it is nature's way as the best antidote for trouble. Yet, it cannot be bought, begged, borrowed or stolen, for it is something that is of no value to anyone until it is given away. Some people are too tired to give you a smile, give them one of yours, as none needs a smile so much as he who has no more to give.

Mrs. Thilaga Weerasingham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு புண்ணிய ஸ்தல யாத்திரை
# புராணக் கதைகளின் மகிமை

பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி. இதை தாரோதாம் யாத்திரை என்று கூறுவார்கள். காலம் காலமாக மனதில் அடங்கிக்கிடந்த அபிலாசையைப் பூர்த்தி செய்யும் நேரம் வந்துவிட்டது. இதை எண்ணி நீங்கள் பூரணமாக மகிழ்ச்சி அடையலாம். உத்தர காண்ட யாத்திரையின் வழியெங்கும் நிகரற்ற இயற்கை அழகு காணக்கிடக்கிறது. இந்த அழகுக்கு உலகெங்கும் ஈடு இணை இல்லை. வெளிப்படுத்தச் சொற்களும் இல்லை. பத்திரிநாத். செல்ல நடைப்பயணம் மட்டுமே என்ற காலம் முடிந்து விட்டது. இப்போது வாகன வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும் இது ஒரு கடினமான பாதை. இந்தப் பாதையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். பஞ்சபாண்டவர்கள் இதே பாதையில் சென்று தான் சுவர்க்கத்தை அடைந்தார்கள். ஹரித்துவாரிலிருந்து பத்திரிநாத்துக்கு சுமார் 180 மைல். போகிற வழி செங்குத்தான பள்ளம். ஆபத்து நிறைந்தது. ஒரு புறத்தில் கங்கையும் அலக்நந்தா நதிகளும் ஜரிகைகள் போல் நெளிந்து வளைந்து மின்னிக் கொண்டு பெரும் ஓசையுடன் ஓடிக்கொண்டிருக்கும். மறு புறமோ செங்குத்தான மலை உச்சங்கள். அதன் உயரங்களைப் பார்க்கும் போதெல்லாம் மனதில் பெரிய நடுக்கம் எடுக்கும். இந்த உயரம் ஆதாள-பாதாளம் இரண்டிற்கும் இடையே மலையைச் சுற்றி பத்திரிநாத் செல்லும் பாதை அமைந்து இருக்கும். மலையின் அடிவாரத்திலிருந்து தான் இந்தச் சாலை போய்க் கொண்டிருக்கும். இந்தப் பள்ளத்தாக்கை மலர்ப் பள்ளத்தாக்கு என்று சொல்லுகிறார்கள். இரு பக்கமும் அழகான றோஜா மலர்களையும், குங்குமப் பூக்களையும், மற்றும் சகல விதமான பூக்களையும் அங்கு மலைச் சரிவுகளில் காணலாம். இவை கண்ணுக்கு மிக அழகாக இருக்கின்றன. இந்த அழகு எங்குமே காண முடியாதது. காணக்கிடைக்காது.

மலைகளுக்கு எல்லாம் அரசனான இமாலயத்தில் உயர்ந்த பனிச் சிகரங்கள் விண்ணை முட்டிக் கொண்டு நிற்கின்றன. பறவைகளின் கானம், மலர்களின் நறுமணம், ஆகாயத்தின் தெளிந்த நீல வானம், இவையெல்லாம் சேர்ந்து நாம் சுவர்க்கலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக எண்ண வைக்கின்றன. கண்கள் இந்தக் கவின் மிகு அழகில் சொக்கிப்போய் இன்னும் தாகத்துடன் இந்த அழகைப் பருக நாற்புறமும் சுழன்று கொண்டே இருக்கின்றன. ஏனென்றால் இந்த மாதிரியான ஒரு விருந்து அடிக்கடி கிடைக்காது. வெள்ளி மலை இமாலயம் இந்த அளவிற்கு ரம்மியமானது என்று நீங்கள் கனவிலும் நினைத்திருக்க மாட்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரகாண்டம் நமது பழைய நாகரீகத்தின் தொட்டில். மகாபாரதத்தின் ஊடும் பாவும் இங்கே தான் நெய்யப்பெற்றது. மகாபாரதத்தின் நாயகர்கள் வீரம், ஆவேசம், அன்பு, பகை, தெய்வீகம், எல்லாவற்றையும் நமக்குக் காட்டியிருக்கிறார்கள். இங்கு தான் வேத கால ரிஷிகள் வேத தர்மத்தை நிறுவினர்.

ஜெய் பத்திரிநாத்
ஜெய் கேதார்நாத்

திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்

# பொன் மொழிகள்

கடவுளின் விருப்பப்படி நடக்கட்டும் என்று நாம் சரணடைந்தால் நமக்கு அந்தக்கணமே அமைதியும் ஆனந்தமும் கிடைக்கும். இந்த சரணாகதி எப்படிக் கிடைக்கும்? கடவுளையும் அவரது லீலைகளையும் அரைக்கணம் கூட விடாது நினைத்துக்கொண்டிருந்தால் தான் இது கிடைக்கும். இதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன? நமது மனம் வாக்கு செய்கைகளை நாம் தூய்மை ஆக்கிக் கொள்ளவேண்டும்.

2. செங்கற்களின் துண்டுகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து மனிதன் மாளிகை எழுப்புகிறான் இங்கே! பிறகு அதைத் தன் வீடு என்று சொல்லுகிறான். ஆனால் உண்மையில் அது அவனதும் அல்ல! எவனதும் அல்ல! அசரீரீ அப்படித்தான். அந்த வீடு வெறும் பறவைகளின் கூடு.

3. உன் வீடு மனை போகும், உன் பொருள் போகும், உனது ஆடைகளும் போய்விடும், வாரி எடுத்து முடிந்த கூந்தல் அழகுப் பெண்மணியும் போய் விடுவாள். இவையெல்லாம் ஒரு கணம் தான். உனக்குப் பாசமாக இருந்தவை எல்லாமே போய்விடும், வெறுமை ஆகி விடும்.

4. எத்தனை ஆசையுடன், எத்தனை நம்பிக்கையுடன் வளர்த்தார்கள். எவ்வளவு அரிதான உணவு படைத்து அவனை அன்பாலே மூழ்கடித்தார்கள். தந்தை என்றும் தாயென்றும் மறந்து விட்டான். ஆனால் அவன் கதி? அம்மாவைத் தூற்ற வேண்டாம். அப்பாவைத் தூற்றாதீர்கள். அவன் அப்படி ஆனதற்குக் காரணம் - அவன்விதி தான்.

திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காசி காசி தான்

காசி முக்தித் தலங்களுள் ஒன்றாகும். காசியில் இறந்தால் முக்தி எனபர். காசியை பனாரஸ் என்றும் வாரணாசி என்றும் அழைப்பர். இமயமலையின் கங்கோத்ரி இடத்தில் தோன்றும் கங்கை காசியில் அமைதியாகச் செல்கின்றது. காசியில் 63 ஸ்நானம்-புனித நீராடும்-துறைகள் உள்ளன. அவற்றை (GHAT) காட் என்பர். மணிகர்ணிகா காட் இடத்தில் நீராடுவது விசேடம் என்பர். எங்கள் பாவங்கள் எல்லாம் கங்கை நீரால் கழுவப்பட்டுவிடும்.

அயோத்தியை விட்டு சாரநாத் போய்ச் சேர்ந்தோம். அங்கு தான் புத்தர் 'ஞானம்' பெற்றார் என்பர். பௌத்தர்கள் புனித யாத்திரை மேற்கொள்ளும் சாரநாத் பௌத்த ஆலயம் உள்ளது.

சாரநாத் நகரில் இருந்து சிவ ராசகாணி எனப்படும் காசி புண்ணிய பூமியை அடைந்தோம். இங்கு பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் கோயில் உண்டு. முதலில் மணிகர்ணிகா புனித துறையில் நீராடி, காசி விஸ்வநாதரைத் தியானித்த படி சந்து பொந்துக்கள் வழியே சென்று காசி விஸ்வநாதரையும் காசி விசாலாட்சி அம்மையையும் தரிசித்தோம். ஆலயத்துக்கு அழகான தங்கக் கோபுரங்கள். காசி விஸ்வநாதர் இலிங்கத்திற்கு அபிடேகப் பொருட்களால் சிறப்பாக அபிடேகம் செய்து, மலர்களால் அர்ச்சித்து தீபாராதனை செய்தார்கள். அதன் பின் எங்களை காசி விஸ்வநாதர் இலிங்கத்தை, எம் தலையால் முட்டியும் கைகளால் ஆரத்தழுவியும் வணங்கச் செய்தார்கள். எனக்குள் நான் என்றுமே பெற்றிராத புல்லரிப்பும், புத்துணர்ச்சியும், புனிதமும் பரவின. எந்த ஒரு கோயிலிலும் இல்லாத, காணாத அற்புதங்களை இங்கு கண்டு, அனுபவித்து பேரானந்தம் பெற்றோம்.

பின்னர் உலகிற்கு அன்னம் அளிக்கும் தேவி அன்னபூர்ணா ஆலயத்திற்குச் சென்றோம். தமிழ் நாட்டுக் கோயில் போல் திகழும் இவ் ஆலயத்தில் அருள் பாலிக்கும் தேவி அன்னபூரணியை கண்கள் பனிக்க தரிசித்து உவகை அடைந்தோம்.

பழமையும் புகழும் வாய்ந்த பனாரஸ் பல்கலைக்கழகம் காசி மா நகரில் உள்ளது.

காசியில் இறக்கும் பறவை, பசு மனிதர் போன்ற சகல உயிர்களும், மரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும் நேரத்தில் உண்டாகும் மரண அவஸ்தையை நீக்க, காசி விசாலாட்சி அம்மை தன் மடி மீது அதன் தலையை வைத்து தன் சேலைத் தலைப்பால் விசிறி ஆசுவாசப் படுத்துவார்கள். அப்பொழுது காசி விஸ்வநாதர் அந்த உடலின் வலது காதில் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி அவ் உயிர்களை முத்தி அடையச் செய்வார் என்று புராணங்கள் கூறும்.

பின்னர் அந்த உடல்களை அரிச்சந்திரா மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனம் செய்வார்கள்.

ஹரித்துவாரில் இருந்து பாய்ந்து ஓடிவரும் கங்கை இங்கு அமைதியாகச் செல்கின்றது. காசி மாநகரைச் சுற்றிச் சுற்றி வளைந்து செல்கின்றது. படகில் கங்கை நதியில் சென்று 63 நீராடும் துறைகளையும், ஆங்காங்கே உள்ள பிரபல்யம் வாய்ந்த கட்டடங்கள், அரண்மனைகள், கோயில்கள் அரிச்சந்திரா மயானம் போன்ற பலவற்றைக் கண்டு மகிழலாம். கங்கை நதியில் நீராடுவது, படகில் பயணம் செய்வது எல்லாமே மனதிற்கு ரம்மியமாகவும் புத்துணர்ச்சி தருவதாகவும் இருக்கும்.

*திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்.*

**அட்டைப்படம்:** கனடாவிலிருந்து வருகை தந்த *திருமதி லோகநாயகி அருளலிங்கத்திற்கு* அளித்த விருந்து உபசாரத்தின்போது எடுத்த படம்.

குறிப்பு : பக்கம் 57

படத்தில் உள்ளோர் – இருப்பவர்கள் இடமிருந்து வலம்: *திருமதி பொன்மலர் கந்தசாமி, திருமதி ரட்ணாவதி திருச்செல்வம், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி சிவகாமி அம்பலவாணர்ஈ திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம், திருமதி லோகநாயகி அருளலிங்கம்ஈ திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா, திருமதி விமலா மணிவாசகன்,*

நிற்பவர்கள் இடமிருந்து வலம்: *திருமதி ஜெகதா ஜெயகிருஷ்ணன், திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன், திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன், செல்வி ஞானலஷ்மி பாலசிங்கம், திருமதி திலகா வீரசிங்கம், திருமதி ருக்மணி அரசரத்தினம், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்,*

கடைசியில் இருப்பவர்கள்: *திருமதி திலகா விஜயரத்தினம, திருமதி சந்திரா பரமேஸ்வரன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளாத மனமும் துள்ளும்

ஒழுங்கு எங்கு தங்குகிறதோ அங்கு அழகு பொங்குகிறது. அழகை விரும்பாதவர் யார்? அழகு எங்கும் உள்ளது, காட்சியில் மட்டுமல்ல ஓசையிலும் கூட, ஓசையின் அழகே இசையாகிறது. காற்றுக் கிளம்பினால், அது கண்டத்திலிருந்து எழும்பினாலும், கருவிகளில் இருந்து எழும்பினாலும் அந்த ஒலியில் ஒழுங்கு உண்டானால் அந்த ஒழுங்கே இசையாகி கவின் தருகிறது. அழகான இசை காதைக் கவர்கிறது. இசையைக் கேட்டு உள்ளம் மகிழவில்லையாயின், ஒருவர் உள்ளமே இல்லாதவராக இருத்தல் வேண்டும். உள்ளமே இல்லாதவர் கொடுஞ்செயல் புரியவும் தயங்கமாட்டார். இதனால்தான் ஆங்கில நாடகக் கவி ஷேக்ஸ்பியர் இசையைக் கேட்டு உருகாதவர் கொடுஞ்செயல் புரிய அஞ்சார் என்று கூறியுள்ளார்.

குரல் பெற்ற உயிர் தோன்றிய காலத்திலிருந்து இசை தோன்றி இன்பம் தந்து கொண்டிருக்கிறது. வசந்தம் வரக் கண்ட குயிலின் உள்ளத்தில் வரம்பில்லாத இன்பம் பெருகுகிறது. அதனால் அது கூவுகிறது. கூவும் அதன் ஓசை கேட்பவர் இன்ப உணர்வுக்கு ஆளாகின்றனர். இன்ப உணர்வால் தோன்றும் இசை இன்ப உணர்வைத் தோற்றுவிக்கும் பாங்கினைப் பாருங்கள். கற்கண்டு இனிக்கும். கற்கண்டைத் தோற்றுவிக்கும் கரும்பும் இனிக்குமன்றோ.

மைந்தன் முகத்தில் சிரிப்பு. அந்தச் சிரிப்பைக் கண்ட தாயின் முகத்திலும் சிரிப்பு மலர்கிறது. அதனைக் கண்ட தந்தையின் முகமும் மலர்கிறது. இனிய இசையின் பயனும் இந்தச் சிரிப்பைப் போன்றது.

மனித வாழ்வில் இசையின் பங்கு சிறந்தது. ஏற்றம் இறைப்பவர்கள் பாடுவது இருக்கட்டும், இறைக்கும்போது அந்த ஏற்றமே பாடுகிறதே. நாற்று நடுவோர், காற்றில் பயிர் தூற்றுவோர், ஆற்றில் உடை வெளுப்போர் அனைவரும் இசை எழுப்புகின்றனர். படகு செலுத்துவோர், பல்லக்குத் தூக்குவோர், பயணம் போகும் இரட்டை மாட்டு வண்டிக்காரர் எல்லோரும் பாடுகிறார்கள். தொட்டில் தொடங்கி, சுடுகாடு வரை மனிதனை இசை தொடர்கிறது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, திருமணப் பருவத்தில் நலங்கு, இறந்ததும் ஒப்பாரி.

எந்த விழாவானாலும் இசைக்கு ஓரிடம், போர்க்களத்தில் படைவீரர் களைப்புப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிவிட இசை. போர் தொடங்கி விட்டது என்று அறிவிக்கும் முரசின் முழக்கமே ஒரு இசைதான்.

நச்சு உள்ளம் கொண்டவனின் நயமொழி போன்று கருத்தைக் கவரும் படமெடுக்கும் நாகமும் இசைக்கு அடங்கும். தலைக்குமேல் கதிரவன் தணலைச் சொரியும் வேளையில் மரத்தடியில் அமர்ந்து குழலைத் தன் இதழ்களில் பொருத்தி இசை எழுப்பும் கோவலன் நடன சுந்தரிகள் போல் சலங்கை குலுங்க அங்குமிங்கும் திரியும் மாடுகளை மந்தையில் இணைக்கிறான். அவை மகிழ்ச்சியில் திளைக்கின்றன. மாடு மாத்திரமல்ல காட்டு யானையும் இசைக்கு அடங்குகிறது.

பெரிய தினைப்புனம், உயர்ந்த பரண், சிங்கம் போன்று வலிமையுடைய கணவன் களித்துக் கிடக்கிறான். அவனுக்கு மகிழ்வூட்ட மனைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள். பரந்த கூந்தலை காற்று உலர்த்த அவளும் விரலால் அதனைக் கோதிக்கொண்டு பாடுகிறாள். அங்கு ஓர் அழகிய காட்சி.

ஓர் இளயானை வாய்வைத்த தினைக் கதிரை உண்ணாது, நின்ற நிலையில் அசையாது காணப்படுகிறது. காரணமென்ன? அந்தப் பெண்பாடிய குறிஞ்சிப் பண்ணுடைய பாட்டு இளயானையை மயக்கி விட்டது. இசையின் இத்திறனை அகநானூற்றுப் பாடலில் நீங்கள் கண்டு நயந்து மகிழலாம்.

*செல்வி சற்சொரூபவதி நாதன்*

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

2001 செல்வி காயத்திரி சிற்சபேசன்
2002 செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன்
2003 செல்வி நிலக்ஷி மகாதேவா
2004 செல்வி துளசி கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏரோடு பேன் வாங்கி

வீடு தேடி வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிவிட்டு வரக்கூடிய விருந்தினரை எதிர் பார்த்திருப்பது தமிழர்களின் சிறந்த பண்பாடு ஆகும். அப்படிப் பட்டவர்கள் இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் நற்கதி அடைவார்கள். இதனையே வள்ளுவப் பெருந்தகை

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு"

எனக் கூறியுள்ளார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த தமிழ் நாட்டில் நம் மூதாட்டி ஔவையார் பாண்டிய மன்னனுடைய திருமணத்தைக் காணச் சென்றிருந்தார். தற் காலத்தில் என்றால் புலவர்களை முன் வரிசையில் இருத்தி அவர்களைத் தான் சிறப்பாகக் கவனிப்பார்கள். ஆதி காலத்தில் மக்களோடு மக்களாகவே இருப்பது புலவர்களின் தன்னடக்கக் குணமாகும். அப்படி இருந்ததனால் ஔவைக்கு உணவுண்ண முடியவில்லை. ஔவையைப் பார்த்து ஒருவன் "மூதாட்டியே உணவு உண்டுவிட்டீர்களா?" என்று கேட்டான். தன் மனத்தில் தோன்றியதை பொய் புனைவின்றி அப்படியே பாடலாகத் தருவதில் சிறந்தவர் ஔவையார். அதன்படி நம் மூதாட்டி நான் விருந்துண்ட பெருமையை ஏன் கேட்பான். விருந்தில் பலரும் என்னை நெருக்கித் தள்ளி விட்டதனால் மிகுந்த பசியினால் நான் களைப்படைந்து விட்டேன். இன்னும் நான் உண்ணவில்லை என்று பாடலாகவே பாடி விட்டார்.

"வண்டமிழைத்தேர்ந்த வழுதி கல்யாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் – அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள் பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்"

உண்டு விட்டீர்களா? என்றதற்கு மறுமொழியாக மூன்று தரம் உண்டேன் உண்டேன் உண்டேன் என்று கூறி எதனைத் தான் உண்டேன் என்பதை நெருக்குண்டேன், தள்ளுண்டேன், சுருக்குண்டேன் என்ற சொற்பிரயோகம் கொண்டு பாடியிருக்கும் அழகே தனி.

பிறிதொரு சமயம் ஔவையாருக்கு ஒரு மனிதன் தன் வீட்டில் அமுது படைக்க விரும்புகிறான். ஆனால் அவனது மனைவியோ பொல்லாதவள். எப்படியும் அவள் மனதைக் குளிரப்பண்ணி ஔவைக்கு அமுது கொடுக்க எண்ணி மூதாட்டியை அழைத்துக் கொண்டு போய் வீட்டுத் திண்ணையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்திவிட்டு உள்ளே போனான். அங்கு அவனது மனைவி தலைவாரிக் கொண்டு இருந்தாள். இவன் அவளருகே சென்று அவளது தலைமயிரைக் கோதி பேன் எடுத்து ஈர் இழுத்து அவள் மனதைக் குளிரப் பண்ணி "இன்று ஒரு விருந்தினரை அழைத்து வந்திருக்கிறேன். அவருக்கு உணவு கொடு" என்று கூறியது தான் தாமதம், அவள் அவனைப் பலவாறு தூற்றி அருகிலிருந்த பழைய சுளகை எடுத்து அவனை ஓட ஓட விரட்டினாள். இதனைப் பார்த்த ஔவைக்கு சிரிப்பு வந்து விட்டது. உடனே அதனையும் ஒரு பாடலாகவே பாடி விட்டார்.

"இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப – வருந்தி மிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழ முறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்."

பெண் இல்லத்தை ஆள்வதால் இல்லாள். மனையை விளக்குவதால் மனையாள். பதியின் உயிருக்காக விரதமிருந்து காப்பவள் பதிவிரதை. இப்படியாக சிறப்புக்கள் பல பொருந்திய பெண்களுடன் சண்டாளி, சூர்ப்பனகை, தாடகை போன்ற பெண்களும் உள்ளனர்.

இங்கும் ஒரு மனிதன் ஔவையாரைக் கண்டவுடன் தனது இல்லத்திற்கு வந்து உணவருந்திச் செல்லுமாறு வேண்டுகிறான். ஔவையும் உடன்பட்டுச் செல்கின்றாள். அங்கு அவன் மனைவிக்கோ விருந்து கொடுக்க விருப்பமில்லை. வேண்டா வெறுப்பாக உணவு படைக்கின்றாள். ஔவை அவள் முகத்தைப் பார்க்கின்றார். சோற்றைக் குழைத்து ஒரு வாய் உண்ண முயல்கின்றார். அவரால் உண்ண முடியவில்லை. உடனே பாடுகின்றார்.

"காணக் கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே – வீணுக் கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பிலாள் இட்ட அமுது."

இன்னொரு நாள் ஔவை நீண்ட தூரம் நடந்து வந்தார். களைப்பு மேலீட்டினால் ஓர் வீட்டுத் திண்ணையில் அமர்கின்றார். அந்த வீடு சிலம்பி என்ற தாசியினுடையது. தாசியின் வீட்டுச் சுவரில்

"தண்ணீருங் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே"

என்ற இரண்டு வரிகளுடன் ஒரு பாடல் காணப்படுகின்றது. அதனைப் பார்த்த ஔவை சிலம்பியிடம் "ஏன் இப்பாடல் முடிவு பெறாமல் இருக்கின்றது?" எனக்கேட்டார். அதற்கு சிலம்பி "மகாகவி கம்பர் ஒரு நாள் இவ்வழியே வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் புகழ்ந்து ஒரு பாடல் புனையுமாறு அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் ஆயிரம் பொற்காசு தரும்படி கேட்டார். என்னிடம் ஐந்நூறு பொற்காசுகள் இருந்தது. அதனைக் கொடுத்து இச்சுவரில் பாடல் எழுதும்படி கேட்டேன். அதனால் அவர் அரைவாசிப்பாடல் எழுதியுள்ளார்" எனக் கவலையோடு கூறினாள். பின்னர் "நீங்கள் களைத்துப்போய் வந்திருக்கிறீர்கள் போலத் தெரிகிறது. என்னிடம் கொஞ்சக் கூழ் இருக்கிறது. அதனைக் குடித்துவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறி கூழ் கொடுத்தாள். அவள் அன்போடு கொடுத்த கூழை உண்டு வயிற்றுப் பசி அடங்கிய பின் ஔவையின் மனமும் குளிர்ச்சியடைந்தது. அவர் உடனே

"– பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று பாடலின் மிகுதி இரண்டடிகளையும் எழுதினார். இதனைப் பார்த்த சிலம்பி ஆனந்தமடைந்தாள்.

பிறிதொரு நாள் நல்ல மழையில் அகப்பட்டுக் கொண்டார் ஔவையார். தூரத்தே ஒரு சிறு குடில் அவர் கண்களிற் பட அங்கு செல்கின்றார். அங்கே பாரி என்ற கொடைவள்ளலின் புதல்வியர் இருவர் அவர் இறந்தபின் ஆதரிப்பார் எவருமின்றி அங்கே வாழ்ந்து வந்தார்கள். அந்த அங்கவை, சங்கவை என்ற இரு பெண்களும் ஔவையை வரவேற்று மாற்றுடையாக தங்களிடமிருந்த ஒரேயொரு நீலச் சிற்றாடையை உடுக்கக் கொடுத்து நெருப்பு மூட்டி குளிர் காயப் பண்ணினார்கள். பின்னர் முருங்கக்காயை நெய் விட்டுச் சமைத்து கேழ் வரகில் களியும் கிண்டி உண்ணக் கொடுத்தார்கள். அதனை உண்டு மனம் மகிழ்ந்த ஔவையார்

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம் பசந்த – பொய்யா
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறிந்த கையார்"

என்று புகழ்ந்து பாடி பின்னர் அவர்களைப் பாண்டிய மன்னனுக்கும் சோழ மன்னனுக்கும் திருமணம் செய்து வைத்தார். நல்லது செய்தால் நல்லதே கிடைக்கும், மனம் விரும்பி விருந்து கொடுப்பவர் வீட்டில் திருமகள் வீற்றிருப்பாள். அக் குடும்பம் ஒரு நாளும் வறுமையால் பாழ்பட்டு அழிந்து விடாது என்பதை உணர்ந்து நாமும் விருந்தினரை ஓம்பி எமது வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மரகதா சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைச் சாவு
# முழு விவரங்கள்

☼ இப்போது மருத்துவ உலகில் மூளைச் சாவு (Brain Death) என்று ஒரு வார்த்தை அடிக்கடி அடிபடுகிறது. உண்மையில், மரணம் என்பதுதான் என்ன?

மரணம் என்பது ஒரு விநாடியில் நடந்து முடிகிற ஒரு சம்பவமல்ல.

முழுமையான மரணம் என்பது உடலின் ஒவ்வொரு அணுவும் இறந்து போகும் நிலை. இதற்கு டிஷ்யூ டெத் (Tissue Death) அல்லது ஸெல்லுலர் டெத் (Cellular Death) என்று பெயர்.

உடலின் இயக்கங்கள் ஒவ்வொன்றாகத்தான் செயலிழக்கும். வெளிப்படையாகத் தெரிவது, சுவாசம் நின்று போதல். முன்பெல்லாம் நாடித்துடிப்பு நின்று போவதையே மரணம் என்றார்கள். நாடித்துடிப்பும் மூச்சும் நின்று போவதை மருத்துவ பாஷையில் 'கார்டியாக் டெத்' (Cardiac Death) என்கிறோம்.

இதே போல், மூளை செயலிழந்து போகும் நிலைக்குத்தான் 'ப்ரெய்ன் டெத்' என்று பெயர். இதயத்துடிப்பு நின்ற பிறகு கூட மூளையின் இயக்கம் தொடரலாம். மூளை முழுக்க முழுக்க இறந்தபிறகும் கூட, இதயம் துடித்துக் கொண்டிருக்கலாம். இதயத் துடிப்பு இருந்தாலும், மூளையின் இயக்கம் இல்லையென்றால் வாழ்க்கை முடிந்துவிட்டது என்றுதான் பொருள்.

உறுப்பு மாற்றுச் சிகிச்சை பரவலான பிறகு 'மூளை இறந்தாலே ஆள் அவுட்' என்று கருதி, அந்த உடலில் இருக்கும் உறுப்புகளை எடுத்து, உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்குப் பொருத்த ஆரம்பித்தார்கள்.

மூளைத்தண்டைப் பரிசோதித்து, மூளைச் சாவை உறுதி செய்வதால் இதை மூளைத்தண்டுச் சாவு (Brain Stem Death) என்றும் சொல்லலாம். பி.பி.சி. பனோரமா என்கிற தொலைக்காட்சித் தொடரில் ஒரு விஷயம் காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூளைத்தண்டு செயலிழந்தால் அவ்வளவுதான். கேம் ஒவர்' என்று சில டொக்டர்கள் ஆதாரபூர்வமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். எதிர் வாதம் செய்து கொண்டிருந்த ஒருவர் திரும்பி "ஜோன் இங்கே வா" என்று கூப்பிட, மேடைக்கு வந்தார் ஒரு மனிதர். அவருடைய கையில் இருந்த டொக்டர் சர்டிபிகேட் "ஜோனின் மூளைத்தண்டு இறந்துவிட்டது. இனி இவருக்கு வாழ்க்கை இல்லை" என்று சொன்னது! பிழைத்து வந்திருக்கிறார். கூடியிருந்தவர்களுக்கு சற்று தர்ம சங்கடமாகப் போனது! இது எப்படி?!

நடந்தது என்னவென்றால், மூளைத் தண்டு இயக்கம் நின்றபிறகும் ஜோனின் உறவினர்கள் 'சுவாசம் இருக்கிறதே . . .செத்து விட்டார் என்று கூறுகிறீர்களே . . .' என்று வாக்குவாதம் செய்ததால், டொக்டர்கள் தங்கள் சிகிச்சையைத் தொடர்ந்திருக்கிறார்கள். பிழைத்துக் கொண்ட ஜோன் இப்போது 'டி.வி. ஷோவுக்கு வந்து நிற்கிறார்! ஆனால், இது மிக அபூர்வமான ஒரு விதிவிலக்கு. அவ்வளவுதான்.

மூளை இறந்து, இதயம் துடித்துக் கொண்டிருக்கும் நிலையில் உள்ள நோயாளியின் உடலிலிருந்துதான் உறுப்புகளை எடுத்து இன்னொருவருக்குப் பொருத்த முடியும் என்பதால், உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்யும் டொக்டர்கள், சில சமயம் நரம்பியல் நிபுணரின் சிகிச்சையின் கீழ் உள்ள சலனமற்ற நோயாளிகளைப் பார்த்து "Brain Death போல இருக்கே . . ." என்று கேட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.! 'இந்த நோயாளிகளின் உடல் கிடைத்தால், இன்னொரு உயிருக்கு உதவ முடியுமே . . .' என்கிற ஆர்வம் அவர்களுக்கு. இந்த ரீதியில் பிரச்சினை எதுவும் வந்துவிடக்கூடாது. என்பதற்காக, 'உறுப்பு மாற்றுச் சிகிச்சையில் ஈடுபட்டிருக்கும் டொக்டர்களுக்கு மூளைச்சாவு சான்றிதழ் கொடுக்கும் தகுதி கிடையாது' என்று அமெரிக்காவில் ஒரு சட்டமே போட்டிருக்கிறார்கள்.

திருமதி திலகா வீரசிங்கம்.

நன்றி - 22.9.1996 ஆனந்தவிகடன் பத்திரிகையில் டொக்டர் K. லோகமுத்துக்கிருஷ்ணன் அவர்களின் பேட்டி.

## Friendship

Your friendship is like the sun
Coming up each morning -
It's something I can count on
To warm the world and brighten my life.

Thilaga Weerasingham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சின்னஞ் சிறு முருகன்

சின்னச் சின்னப் பூக்களைக் கொய்திடுவேனே – அதை
சின்னச் சின்ன மாலைகளாய்த் தொகுத்திடுவேனே பின்னே
சின்னஞ் சிறு முருகனுக்கு அணிந்திடுவேனே – அவன்
சின்னச் செவ்வாய்க் குமிழ்ச் சிரிப்பில் கிறங்கி நிற்பேனே.

சின்னஞ் சிறு முருகனவன் சிரித்துக் கொண்டேதன்
சின்னஞ் சிறு கால்களில் வெண் தண்டை யணிந்தே
சிறு நடையாய்க் குறு நடையாய் என் முன் வரவே – ஒரு
அன்னையரின் ஆர்வத்துடன் அள்ளி யணைப்பேனே.

சின்னஞ் சிறு சிறார்கள் கூடி காவடி தூக்கி
சின்னக் கால்களால் ஆடி வலம் வருவாரே
மேகவர்ண மயிலோடவன் ஆடி வந்தே
மெய் சிலிர்க்க அபயக்கரம் காட்டி அருள்வானே.

என்ன இந்த விந்தையதை எங்கண் விளம்ப –
எந்த னுயிர் கந்தனவன் கருணை தன்னையே
கூறுமடியார்கள் தம் வினைகள் தீர்க்கவே
கூறு செய்தான் குன்றதனைக் குமரக் கடவுளே –
(சின்னச் சின்ன)

தமிழழகன் அவனைத் தந்தார் சிவனும் சக்தியும்
தமிழரெம் மனக் குறைகள் தீர்க என்று நாம்
தலை வணங்கி கை கூப்பி தாளைப் போற்றுவோம்
தமிழர் இனி இன்பமாய் வாழ வைப்பானே.

***ஆக்கம்: திருமதி திலகா வி. விஜயரத்தினம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தொண்டீஸ்வரம்'!

### அமைவிடம்

இலங்கையின் தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தென்முனையில் உள்ளது தேவேந்திரமுனையாகும். பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரையும் என்று இலங்கையின் வட தென் எல்லைகள் குறிப்பிட்டுக் கூறப்படுவதை நாம் அறிவோம். பருத்தித்துறையில் உள்ள சிவாலயம் பசுபதீஸ்வரம். அதே போல தேவேந்திரமுனையில் இருந்தது தொண்டீஸ்வரம் ஆகும். இது சந்திரசேகரேஸ்வரம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாலயம் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய சிறப்பு மிக்க சிவாலயமாகும்.

### பழம் பெரும் கோயில்

தொண்டீஸ்வரத்தின் மூலமூர்த்தியாக விளங்கிய சிவனின் திருநாமம் சந்திரமௌலீஸ்வரர். சிவலிங்கத்தின் முடியில் பெறுமதிவாய்ந்த மாணிக்கக்கல் ஒன்று கிரீடமாகப் பதிக்கப்பட்டும் இருந்துள்ளது. இது மட்டுமன்றி, கோயில் விமானத்தில் தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டு இருந்தமையால் சூரியஒளி பட்டுப் பிரகாசித்ததாக போர்த்துக்கேய எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வொளி கடலில் செல்லும் கப்பல்களுக்கு திசைகாட்டியாக இருந்தது என்று கிரேக்க மாலுமிகளால் வரையப்பட்ட தேசப்படம் ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளதை நூலகம் ஒன்றில் இருப்பது தெரியவந்துள்ளது.

இது பழம் பெருமை மிக்க தேவன்துறை விஷ்ணு ஆலயத்தோடு இணைந்திருந்த சிவாலயம் ஆகும். மாத்தறை வழியாகக் கதிர்காமம் செல்லும் சைவர்களைச் சிவசிந்தனையில் ஆழ்த்தும் தன்மை கொண்டிருந்தது. தங்கள் மதத்தைப் பரப்பும் எண்ணம் கொண்ட வெறியர்களான போர்த்துக்கேயரால் இலங்கையில் இருந்த இந்துக்களின் மிகப்பெரும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தொண்டீஸ்வரக் கோயிலும் அழித்தொழிக்கப்பட்டது. அத்துடன் கோயில் பூசகர்களை இம்சைப்படுத்தும் நோக்கில் மூலஸ்தானத்தில் வைத்துப் பசு ஒன்று வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

### பஞ்ச ஈஸ்வரங்கள்

இலங்கையின் தென்பகுதியை தேவநம்பியதீசன் என்ற அரசன் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். அவன் காலத்தில் மகிந்த தேரரால் இலங்கைக்கு கி.மு 237 இல் பௌத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதக்கு முன்னரே இரண்டரை நூற்றாண்டுகளுக்கு முன்பே விஜயன் இலங்கைக் கரையில் ஒதுங்கியதாக மகாவம்சம் கூறுகின்றது.

விஜயன் வருகை தருவதற்கு மிக நீண்ட காலத்திற் முன்பு இலங்கையில் ஐந்து பிரசித்தி பெற்ற சிவாலயங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 'பஞ்ச ஈஸ்வரங்கள்' எனக்குறிக்கப்படும் இவை, முறையே வடக்கில் நகுலேஸ்வரம் என்றும், கிழக்கில் திருக்கோணேஸ்வரம் என்றும், மேற்கில் திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் என்றும், தெற்கில் தொண்டீஸ்வரம் என்றும் திருப்பெயர்களைக் கொண்டிருந்தன.

இன்று, முதல் நான்கு சிவாலயங்களும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் மீளபுனரமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தொண்டீஸ்வரம் போர்த்துக்கீசரால் சிதைக்கப்பட்ட பின் மீளபுனரமைக்கப்படவில்லை. ஆனால் அவ்விடத்தில் பல தெய்வங்களுக்கு தனித்தனி கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இதனுடன் இணைந்திருந்த விஷ்ணு ஆலயம் சிங்கள மக்களால் மீளபுனரமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இவ்வாலயம் தேவிநுவர விஷ்ணு ஆலயமாக பிரசித்தி பெற்றுள்ளது.

## புதிய தேவிநுவர விஷ்ணு ஆலயம்

இத்தலத்தின் மூலமூர்த்தியான ஸ்ரீ மஹாவிஷ்ணு இந்து மகா சமுத்திரத்தை நோக்கியவண்ணம் எழுந்தருளியுள்ளார். இவ்வாலயத்தில், கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட சந்திர வட்டக் கல்லினை நாம் இன்றும் காணலாம். விஜ–யனின் மகுடாபிஷேகம் இங்கு கோலாகலமாக நடைபெற்றதாகக் கர்ண பரம்பரைக் கதை உள்ளது. இவ்வாலயம் ஒரு பழம்பெரும் சிற்பக் கலைக்கூடமாக மிளிர்வது குறிப்பிடத்தக்கது.

இதனுடன் இணைந்து சகல இந்து தெய்வங்களுக்கும் தனித்தனி கோயில்கள் சிறப்புடன் உள்ளன. பிள்ளையார் கோயில், கந்தசாமி கோயில், வள்ளியம்மன் கோயில், பத்தினி அம்மன் கோயில், கிழக்குத் தேவதை கோயில், 'தடிமுண்ட' என்று பௌத்தர்களால் குறிக்கப்படும் காவல் தெய்வத்தின் கோயில் என்பனவற்றுடன் சமன் தேவாலயமும் உள்ளது.

தமிழில் நாம் 'சிவன்' என்று அழைப்பது சிங்களத்தில் 'சமன்' என்று குறிப்பிடப்படுவதாகக் கொள்ளலாம். ஏன் என்றால் சிவனொளிபாதத்தைச் சிங்களத்தில் 'சமனௌலகந்த' என்கின்றனர். இதன் அடிப்படையில் சமன் தேவாலயம் 'சிவாலயம்' என்று கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொண்டீஸ்வரம் என்று பெயர் கொண்டு இருந்த அப்புனித இடத்தில் இன்று இந்துத் தெய்வங்களான பிள்ளையார், அம்மன், முருகன், விஷ்ணு ஆகியோருடன் 'சமன்' என்று மருவிய திருப் பெயருடன் சிவனாரும் எழுந்தருளி உள்ளார். கிழக்குத் தேவதை என்னும் போது கிழக்கில் உதயமாகும் சூரியன் என்று கொண்டால் இந்து மதத்தின் ஆறு பிரிவுகளும் ஒருங்கே அமைந்த இடமாக பண்டைய தொண்டீஸ்வரம் இன்றைய தேவிநுவரவாக விளங்குகின்றது எனலாம்.

சிவனைத்தவிர வேறு எந்த தெய்வத்துக்கும் தொடர்புடையதாக நந்தி இல்லை ஆனால் கந்தசாமி கோயில் முன்பாக சகல அம்சங்களும் கொண்ட மிக அழகான நந்தியொன்று கோயிலுக்கு வெளியேயுள்ளது. எதுவித பாதிப்புக்கும் உள்ளாகாத நந்தி சிலை, குறிப்பிட்ட இடத்தில் சிவாலயம் இருந்ததற்கான மிகச்சிறந்த சான்றாகும்.

இந்து தெய்வமான விஷ்ணுவைப் போற்றி வழிபாடு செய்யும் சிங்கள மக்களைப் போன்று கதிர்காம யாத்திரை செய்யும் தமிழ், இந்து மக்களும் காலியில் உள்ள பழம்பெருமை கொண்ட மீனாட்சி சுந்தரேஸ்வரத்தையும், சிறப்புடன் விளங்கிய பண்டைய பெருமை கொண்ட தொண்டீஸ்வரத்தையும் சென்று வழிபடுவதன் மூலம் சமய, சமுதாய நலங்களைப் பெறமுடியும்.

## ஆதாரங்கள்

தொண்டீஸ்வரம் அமைந்திருந்தமையால் தேவேந்திரமுனையை ஐரோப்பியர் தொண்றாமுனை (Donrapoint) என்று குறிப்பிட்டுள்ளமை இதன் அமைவிடத்தை உறுதிப்படுத்துகின்றது.

தேவேந்திரமுனை என்றும், தொன்றாமுனை என்றும் குறிப்பிட்ட அவ்விடம் இன்று தேவிநுவர என்று பெயர் கொண்டு விளங்குகின்றது. தேவிநுவர என்ற சிங்களச் சொல்லின் பொருள் தேவநகரம் அல்லது தெய்வநகரம் என்பதாகும்.

வரலாற்று அறிஞரான கலாநிதி. போல் ஈ.பீரிஸ் இலங்கையில் இருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐந்து ஈஸ்வரங்களைப் பற்றி 1917 இல் றோயல் ஆசிய சங்கத்தின் (Journal of the Royal Asiatic Society) வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. இவர் ஆய்ந்து எழுதிய கட்டுரை தென்னிலங்கையில் தேவேந்திரமுனையில் சிவாலயம் இருந்தமையை உறுதி செய்கின்றது.

லண்டன் நகரில் பிரபலமான நியூஸ் லங்கா (NEWS LANKA) 1998 நவம்பர் மாத வார இதழில் "சிவலிங்கம் ஒன்று தேவிநுவரவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க தேவிநுவரை விசித்ராம விகாரையின் (HISTORICAL VICHITTHRAMA VIHARAYA) ஒத்பிலிம விகாரையில் (OTHPILIMA VIHARA) இச்சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவர் நிலத்தைச் செதுக்கிக் கொண்டிருந்த போது இச்சிலை கண்டுபிடிக்கப்பட்டது. இச்சிவலிங்கம் 4 அடி உயரமும், 2½ அடி அகலமும் கொண்டது. முன்பும் கூட அதேயளவில் இது போன்ற உருவங்கள் கண்டு எடுக்கப்பட்டன. இப்பகுதியில் முன்பு சிவதேவாலயம் இருந்ததற்கான ஆதாரமாக இதனைக் கொள்ள முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இப்பகுதியில் இந்துக் கோயில் இருந்ததற்கு ஆதாரம் இல்லை. அதனால் இச்சிவலிங்கம் தொண்டீஸ்வரத்தில் இருந்த மூர்த்தியாக கருதலாம். அத்துடன், அதன் அளவை நோக்கும் போது அப்பழம் பெரும் கோயிலின் மூல மூர்த்தியாகவே இருத்தல் வேண்டும்.

அதேபோன்று, 1998 இல் தொன்றாமுனையில் தோண்டும் போது எடுக்கப்பட்ட நந்தியும், அதே சிறப்புகளுடன் உள்ளது. ஐந்து நூற்றாண்டுகளாக மறைந்திருந்த தொண்டீஸ்வரத்தை மீளவும் உலகிற்கு விளக்கும் சான்றுகளாக நன்கு வடிவமைக்கப்பட்ட நந்தியும், சிவலிங்கமும் நமக்கு கிடைத்துள்ளன.

இதன் அடிப்படையில் இந்து கலாச்சார அமைச்சு, இந்து மாமன்றம் போன்ற இந்து அமைப்புக்கள் இவ்வாலயச் சான்றுகளை ஆராய்ந்து வெளி உலகத்துக்கு கொண்டு வரவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அவர்களுக்கு உறுதுணையாக இறைவன் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

தொகுப்பு
*திருமதி. விமலா மணிவாசகன்*

---

நன்றி:- இந்து சமய திணைக்களத்தின் வெளியீடான "சிவராத்திரிசிறப்பு", பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசார அமைச்சு வெளியீடான "இலங்கைத்திருநாட்டின் இந்துக்கோயில்கள்" என்னும் நூல்கள். புதின பத்திரிகைகள்.

"சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

ஒழுக்கம் உயர்குலம் என்பது பெரியோர் வாக்கு. எப்பவும் ஒழுக்கமாய் தங்கள் கடமைகளைச் செய்து பெரியோரோ, சிறியோரோ, அவர்களுடன் பணிவன்புடன் பேசுபவர்களைக் கண்டால், அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் என்று நாம் எம்மை அறியாமலே சொல்வோம், ஆம்! நாமும் அப்படியே நற்பழக்கங்களைப் பின்பற்றினால் என்ன? பெண்ணாகப் பிறந்தால் ஒழுக்கம் முக்கியம். கால்மேல் கால் போட்டு இருத்தல், கால்களை ஆட்டுதல், கூந்தலை விரித்தபடி, கறுப்பு உடை அணிந்து நற்காரியங்கட்குச் செல்லுதல், ஆண்களை மதியாது பட் பட் என்று கதைப்பது ஆகியவைகள் யாரும் ஏற்கமாட்டாத செய்கைகள்,

அன்பைக்கொடுத்து அன்பை வேண்டவேண்டும். போகும் பாதையில் துப்புவது ஒருபோதும் ஆகாத செயல். அடம்பிடிக்கும் சிறுவர்களை, அவர்கள் எதற்கு அடம் பிடிக்கிறார்கள் என்பதை அறிந்து, அவர்கள் கேட்பதைச் செய்கிறோம் என்று கூறி, ஒருபடி சமாளித்தல் வேண்டும். அன்புடன் அவர்கள் முதுகில் தடவி அவர்கள் அழுகையை அடக்கவேண்டும். அவர்கள் பிடிவாதமும் நின்றுவிடும். சிலர் சிறுவர்கள் செய்யும் பிழையை என்ன என்று அறியாமலேயே, பட் என்று அடித்து விடுவார்கள். ஒரு போதும் சிறுவர்கட்கு அடிக்கக்கூடாது. அடிப்பதால் அவர்கள் மனம் பயத்தால் குறுகிவிடும். பெரியோரைக் கனம் பண்ண வேண்டும். சிறியவர்களாகிலும் பணிவோடு கதைத்தல் வேண்டும். பெரியவர்கள் பேசும் இடத்தில் சிறியவர்களைக் காணக் கூடாது.

உணவு பரிமாறும்போது, உணவு சிந்தாமல் சிதறாமல், பயபக்தியுடன், அன்பாய்ப் பரிமாறல் வேண்டும். சாப்பிடும்போது கையால் பிசைந்து. அருகே உள்ளவர்கள் நம்மைப் பார்த்து, அசிங்கப்படாவண்ணம், உள்ளங்கையில் உணவு படாமல், உண்பதே அழகு. தும்மல், இருமல், கொட்டாவி, விக்கல், பல்தோண்டுதல் இவைகள் நாம் அறியாமல் வருபவை. இவை வரும்போது நாம் கைகளால் மறைக்க வேண்டும், அல்லது அந்த இடத்தை விட்டு விலகி நிற்கவேண்டும். சில பெண்பிள்ளைகள் 10 வயதில் 15 வயதுத் தோற்றமாய் இருப்பார்கள். அவர்கள் உடம்பிற்கேற்றபடி உடை அணிதல் வேண்டும். ஒழுக்கம் என்பது என்றும் நாம் கவனிக்க வேண்டியது. நாம் இலங்கை வாழ் மக்கள் எமக்கு ஒழுக்கம் முக்கியம்.

நாம் கணினி (computer) உலகத்தில் இருந்தாலும் எமது பண்பாடு ஒழுங்கு முறை மாறாது.

*திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம், பழைய மாணவி, J-3-5 அன்ரசன் தொடர்மாடி, கொழும்பு 5*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# some useful advice

1. Never give up-on anybody. Miracles happen every day.
2. Don't waste time learning the "tricks of the trade".
3. Stop blaming others. Take responsibility for every area of your life.
4. Make the best of bad situations.
5. Admit your mistakes.
6. Use your wit to amuse, not abuse.
7. Demand excellence and be willing to pay for it.
8. Be brave. Even if you're not, pretend to be. No one can tell the difference.
9. Think big thoughts, but relish small pleasures.
10. Smile a lot. It costs nothing and is beyond price.
11. Learn to listen. Opportunity sometimes knocks very softly.
12. Never deprive anyone of hope: it might be all they have.
13. Be kinder than necessary.
14. Resist telling people how something should be done. Instead, tell them WHAT needs to be done. They will often surprise you with creative solutions.
15. Never give up on what you really want to do. The person with big dreams is more powerful than one with all

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the facts.

16.Be romantic.

17.Become the most positive and enthusiastic person you know.

18.Don't spread yourself thin. Learn to say NO politely and quickly.

19.Accept pain and disappointment as a part of life.

20.Judge your success by the degree that you're enjoying peace, health, and love.

21.Live life as an Exclamation, not as an explanation.

22.Instead of using the words "if only", try substituting the words, "next time".

23.Never waste an opportunity to tell someone you love them.

24.Take charge of your own attitude. Don't let someone else choose it for you.

25.Understand that happiness is not based on possessions, power or prestige, but on relationships with people you love and respect.

26.Focus on making things better, not bigger.

27.Take care of your reputation. It's your most valuable asset.

28.Watch for big problems. They disguise big opportunities.

29.Don't delay on acting on a good idea. Chances are someone else just thought of it, too. Success comes to the one who acts fast.

Thilaga Weerasingham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 வைஷ்ணவ திவ்ய தேசங்கள்

ஸ்ரீமன் நாராயணன் பரவாசுதேவனாக ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளி இருந்தவன். ஷீராப்தி நாதனாக திருப்பாற்கடலிலே ஆதிஷேஷன் பாம்பணையில் விபூகவாசுதேவனாக வந்து சயனித்தான். அங்கிருந்து எழுந்தருளி மதுராநகரிற்கு வந்து கிருஷ்ணனாக அவதாரித்தான் என்பது புராணங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகவே பரவாசுதேவன் ஸ்ரீவைகுண்டம் முதல்நிலை, அடுத்தது திருப்பாற்கடல் விபூகவாசுதேவன் இரண்டாம்நிலை, மூன்றாவது விபகவாசுதேவன். இதில் பரவாசுதேவனைப் பற்றி எத்தனையோ அனுபவங்கள் உண்டு. விபூகவாசுதேவனைப் பற்றி ஆழ்வார்கள் பரக்கப்பாடியுள்ளார்கள். அடுத்தது விபகஅவதாரத்தைப் பற்றியும் எத்தனையோ அனுபவங்கள் உண்டு. அவை போய்விடக்கூடாது என்று அர்ச்சாவதாரமாக பல திவ்யதேசங்களில் பகவான் சேவைசாதிப்பின்றான். இவையே நூற்றியெட்டு வைஷ்ணவ திவ்யதேசங்களாகும். இவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கநாதர் | ஸ்ரீரங்கம் |
| 2. | அழகிய மணவாளப்பெருமாள் | திருவுறையூர் |
| 3. | நீலமேகப்பெருமாள் | திருதஞ்சை மாமணிக்கோயில் |
| 4. | வடிவழகிய நம்பி | திருவன்பில் |
| 5. | புருஷோத்தமன் | திருக்கரம்பனூர் |
| 6. | புண்டரீகாக்ஷன் | திருவெள்ளரை |
| 7. | வல்வில்லிராமன் | திருப்புள்ளம்பூதக்குடி |
| 8. | அப்பக்குடத்தான் | திருப்பேர்நகர் |
| 9. | ஆண்டளக்கும் அய்யன் | திருஆதனூர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 10. ஆமருவியப்பன் | திருவழுந்தூர் |
| 11. அருமாக்கடலமுதன் | சிறுபுலியூர் |
| 12. சாரநாதர் | திருச்சேறை |
| 13. நான்மதியப்பெருமாள் | திருதலைசங்கநாண்மதியம் |
| 14. ஆராவமுதர் | திருக்குடந்தை |
| 15. அரன் சாபம்தீர்த்த பெருமாள் | திருக்கண்டியூர் |
| 16. ஒப்பிலியன் | திருவிண்ணகர் |
| 17. சவுரிராஜப் பெருமாள் | திருக்கண்ணபுரம் |
| 18. வயவாளிமணவாளன் | திருவாலித்திருநகரி |
| 19. சவுந்தரராஜப் பெருமாள் | திருநாகை |
| 20. வடிவழகிய நம்பி | திருநறையூர் |
| 21. ஜெகந்நாதப் பெருமாள் | திருநந்திபுரவிண்ணகரம் |
| 22. சுகந்தவனநாதர் | திருஇந்தளூர் |
| 23. தில்லைகோவிந்தராஜப்பெருமாள் | திருச்சித்ரகூடம் |
| 24. தாடாளர் | காழி ஸ்ரீராமவிண்ணகரம் |
| 25. வையங்காத்தப்பெருமாள் | திருக்கூடலூர் |
| 26. சியாமளமேனிப்பெருமாள் | திருக்கணங்குடி |
| 27. பக்தவத்சலப்பெருமாள் | திருக்கண்ணமங்கை |
| 28. கஜேந்திரவரதர் | திருகவித்தலம் |
| 29. கோலவில்லிராமன் | திருவெள்ளியங்குடி |
| 30. நந்தாவிளக்குப்பெருமாள் | திருமணிமாடக்கோவில் |
| 31. வைகுந்தநாதன் | திருவைகுந்த விண்ணகரம் |
| 32. குடமாடிய கூத்த பெருமாள் | திருவரிமேய விண்ணகரம் |
| 33. தெய்வநாயகன் | திருத்தேவனார்தோகை |
| 34. புருஷோத்தமப் பெருமாள் | திருவண் புருஷோத்தன் |
| 35. போருளாளப் பெருமாள் | செம்பொன் செய்கோவில் |
| 36. செங்கண்மால் | திருத்தெற்றியம்பலம் |
| 37. மணிக்கூடநாயகர் | திருமணிக்கூடம் |
| 38. கோபாலகிருஷ்ணர் | திருக்காவளம்பாடி |
| 39. கண்ணன்சாராயணன் | திருவெள்ளக்குளம் |
| 40. தாமரையாள் கேள்வன் | திருபார்த்தன்பள்ளி |
| 41. அழகர் | திருமாலிருஞ்சோலை |
| 42. சவும்யநாராயணர் | திருக்கோட்டியூர் |
| 43. சத்யகிரிநாதன் | திருமயம் |
| 44. தெய்வச்சிலை | திருப்புல்லாணி |
| 45. அப்பன் | திருத்தன்காலூர் |
| 46. காளமேகப்பெருமாள் | திருமோகூர் |
| 47. கூடலழகர் | திருக்கூடல் |
| 48. வடபத்ரசயனர் | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 49. ஆதிகேசவப் பெருமாள் | திருக்குருகூர் |
| 50. அரவிந்தலோசனன் | திருதொலைவில்லிமங்கலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 51. தெய்வநாயகர் | திருவரமங்கை |
| 52. காசினிவேந்தன் | திருப்புளியங்குடி |
| 53. மகாநெடுங்குழைக்காதர் | தென்திருப்பேரை |
| 54. ஸ்ரீவைகுந்தநாதன் | ஸ்ரீவைகுந்தம் |
| 55. விஜயாசனர் | திருவரகுணமங்கை |
| 56. மாயக்கூத்தன் | திருக்குளந்தை |
| 57. வைஷ்ணவநம்பி | திருக்குறுங்குடி |
| 58. வைத்தமாநிதி | திருக்கோளூர் |
| 59. அனந்தபத்மனாபன் | திருவனந்தபுரம் |
| 60. திருவாழ்மார்பன் | திருவண்பரிசாரம் |
| 61. காட்கரையப்பன் | திருகாட்கரை |
| 62. திருமூழிக்களத்தான் | திருமூழிக்களம் |
| 63. மாயப்பிரான் | திருப்புலியூர் |
| 64. இமையாரப்பன் | திருச்செங்குன்றூர் |
| 65. பிரசன்ன நாராயணன் | திருநாவாய் |
| 66. கோலப்பிரான் | திருவால்லவாழ் |
| 67. பாம்பணையப்பன் | திருவண்வண்டூர் |
| 68. ஆதிஅனந்த பெருமாள் | திருவாட்டாறு |
| 69. உய்யவந்தப்பெருமாள் | திருவிற்றுவக்கோடு |
| 70. அற்புதநாராயணன் | திருகடித்தாளம் |
| 71. திருக்குறளப்பன் | திருவாறனடவினை |
| 72. தெய்வநாயகப் பெருமாள் | திருவைந்தாபுரம் |
| 73. திரிவிக்ரமன் | திருக்கோவலூர் |
| 74. வரதராஜப் பெருமாள் | திருக்காஞ்சி |
| 75. ஆதிகேசவன் | அஷ்டபஜகரம் |
| 76. தீபப்பிரகாசர் | திருத்தங்கா |
| 77. முகுந்தவரதப் பெருமாள் | திருவேளுக்கை |
| 78. பண்டவர்தூதப் பெருமாள் | திருப்பாடகம் |
| 79. ஜெகதீஸ்வரப்பெருமாள் | திருநீரகம் |
| 80. திருநிலாந்திங்கள்துண்டந்தாள் | திருநிலாந்திங்கள்துண்டம் |
| 81. திருவிக்ரமர் | திருவூரகம் |
| 82. சொள்ளவண்ணஞ்செய்தபெருமாள் | திருவெக்கா |
| 83. கருணாகரப் பெருமாள் | திருக்காரகம் |
| 84. நவநீத சோரன் | திருக்கார்வனம் |
| 85. ஆதிவராகப்பெருமாள் | திருக்கள்வனூர் |
| 86. பவழவண்ணப் பெருமாள் | திருப்பவழவண்ணம் |
| 87. பரமபதநாதன் | திருபரமேஸ்வர விண்ணகரம் |
| 88. விஜயராகவப் பெருமாள் | திருப்புட்குழி |
| 89. பக்தவசகப்பெருமாள் | திருநின்றவூர் |
| 90. வீரராகவப்பெருமாள் | திருஎவ்வளூர் |
| 91. நீலமுகில்வண்ணர் | திருநீர்மலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 92. நித்யகல்யாணப் பெருமாள் | திருவிடவெந்தை |
| 93. சித்திய தலசயனத்துறைவர் | திருக்கடல்மல்லை |
| 94. பார்த்தசாரதி | திருவல்லிக்கேணி |
| 95. யோகநரசிங்க சுவாமி | திருக்கடிகை |
| 96. ஸ்ரீனிவாசன் | திருவேங்கடம் |
| 97. நரசிங்கப் பெருமாள் | திருச்சிங்கவேள்குன்றம் |
| 98. ஸ்ரீராமன் | அயோத்தி |
| 99. தேவராஜன் | நைமிசாரண்யம் |
| 100.ஸ்ரீமூர்த்திப் பெருமாள் | திருசாளக்ராமம் |
| 101.பத்ரிநாராயணன் | திருவதரியாச்சிரமம் |
| 102.நீலமேகப்பெருமாள் | திருகங்கைக்கரை கண்டல்காசி |
| 103.பரமபுருஷன் | திருப்பிருதி |
| 104.கல்யாணநாராயணன் | துவாரகை |
| 105.கோவர்தனநேசன் | திருவடமதுரை |
| 106.நவமோகனகிருஷ்ணன் | திருவாய்ப்பாடி |
| 107.ஷிராப்திநாதன் | திருப்பாற்கடல் |
| 108.பரமபதநாதன் | சரமபதம் |

இதில் சோழநாட்டு திருப்பதிகள் நாற்பது. பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு. மலைநாட்டு மலையாள திருப்பதிகள் பதின்மூன்று. நடுநாட்டு திருப்பதிகள் இரண்டு.தொண்டை நாட்டு திருப்பதிகள் இருபத்திரண்டு. வடநாட்டு திருப்பதிகள் பன்னிரண்டு. திருநாடு ஸ்ரீவைகுண்டம் ஒன்று ஆக மொத்தம் நூற்றியெட்டு.

தொகுப்பு
*திருமதி. அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்*

நன்றி - புதின பத்திரிகை

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையாயெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
ஊடையாய் தகுமோ இவள் உள் மெலிவே

நீர் நிலைகளில் குவளை மலர்கள் மலர்ந்து மணம் செய்யும் திருமருகலைத் தனக்குரிய ஊராக உடைய பெருமானே! இப்பெண், சடையாய் என்றும் விடையாய் என்றும் நீயே எனக்குப் புகலிடம் என்றும் கூறி அஞ்சி மயங்கி விம்முகின்றாள். உன்னையே நினைந்து புலம்பும் இவள் மன வருத்தத்தைப் போக்காதிருத்தல் உன் பெருமைக்குத் தக்கதோ? (குறிப்பு: பக்கம் 37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணில் குஞ்சு!

சின்னவள் நான் வியந்து நின்றேன்
சிறிய அணிலைக் கண்டு
வண்ண வண்ண மாதுளையை
வாயூர உண்பதைக் கண்டு
தாவித் தாவி ஓடுகின்றாயே—நீ
தருவாயோ உன் சுறுசுறுப்பை
கேவிக் கேவி அழுதிடுவேன்
உன்னை என்றும் காணாவிடில்
சீவி வைத்திருக்கின்றேன்
சின்னக் கொய்யா ஒன்று—அதனால்
சீக்கிரமாய் நீயும் வந்துவிட்டால்
உனக்கும் கொய்யாப் பழம் தந்திடுவேன்
இனிய இசைபோல் தென்றலிலே கலந்து வரும்
கீச் . . . கீச் . . . சப்தம் கேட்டு—மனம்
கனிய சின்னப் பாப்பாவும் கண்ணயரும்
இனிய தாலாட்டைப்போலவே
செல்லமாக நான் வரைவேன்
களங்கமற்ற உன் திருவுருவை
பள்ளம் மேடு நோக்காமல்
துள்ளித்திரியும் நீ—என்
மனக் கடலில் மிதந்திடும்
இனிய வள்ளமே
அணில் குஞ்சே! அணில் குஞ்சே!
அண்ணார்ந்து பார்த்திடுவாய்
சின்னவன் உன்னைப் பிடித்திடவே
கள்ளன் போல பதுங்குகின்றான்
சின்னக் கண்ணன் கரங்களுக்குள்
சிறைப்பட முன்னரே தாவி தாவி மரத்திலேறி
சீக்கிரமாய் தப்பிப்போ சின்ன அணிலே!

– *எழுதியவர் செல்வி ஜன்சி கபூர்*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்*

நன்றி: பழைய புதினப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்டை அரங்கம்:
இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது.

I

பெண்களின் வரலாற்றை நோக்கினால் அவர்கள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகின்றது. பெண்கள் 20 வயதை அடைந்துவிட்டால் அவர்களுக்கு குடும்பப் பொறுப்பு சூழ்ந்து வெளியுலகமே தெரியாத நிலை ஏற்பட்டது. ஆனால் தற்போதைய சூழலில் படிப்பில்லா பெண்கள் அரிது. அவர்கள் படித்து பட்டம் பெற்று முன்னோக்கி வரவேண்டும் என்பது தான் ஆவல்.

பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு நல்ல சூழல் காணப்படுகிறது. பெண்கள் ஆண்களை விட எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசியலில் பங்கேற்பதற்கு முழு உதாரணமாக இன்று ஜனாதிபதியை எடுத்துக் கொள்ளலாம். மற்றைய நாடுகளிலும் மாக்கிரட் தட்சர், பெனாசிர் பூட்டோ, இந்திரா காந்தி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எல்லோரும் அரசியலில் ஈடுபட்டு நல்ல பதவியையும் அடைந்துள்ளார்கள். எலிசபெத் மகாராணியார் இன்று பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகளின் தலைவியாக விளங்குகிறார்.

தற்போதுள்ள கணனி யுகமே பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு நல்ல சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. மக்கள் அலைந்து திரியாமல் வீட்டிலிருந்து கொண்டே எல்லாவற்றையும் செய்யக் கூடியதாயிருக்கிறது. பெண்கள் இன்று சகல வேலைகளையும் தாங்களே செய்து வருகிறார்கள். வீட்டு வேலைகள் உதாரணமாக மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் என்று எல்லாவற்றிற்கும் உரிய பணத்தைத் தாங்களே கட்டி வருகிறார்கள்.

அந்தக் காலத்திலே கூட வாள் ஏந்தி பெண்கள் போர் புரிந்தார்கள் அப்படி சூழல் இருந்தும் ஏன் பெண்கள் அஞ்ச வேண்டும். இன்றைய அரசியலில் பங்கேற்பதற்கு நல்ல சூழல் காணப்படுகிறது.

அன்றும் இன்றும் பெண்களின் பெயரில்தானே கன்னியா குமரி முதல் இமயம் வரை கங்கை, யமுனை, சரஸ்வதி என்று நதிகள் பாய்கின்றன. சிவனின் பாதி பெண் அர்த்த நாரிஸ்வரர் என்றும் சக்தி என்றும் சொல்லுகிறார்கள். அந்த சக்தி இல்லையேல் உலகம் இல்லை. ஒரு ஆணின் வெற்றிக்கு பின்னால் நிற்பது ஒரு பெண் தான் என்றும் சொல்லுகிறார்கள். ஆனபடியால் கட்டாயமாக இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது. ஏற்கப்படுகிறது.

*திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்டை அரங்கம்:

இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது.

## II

இன்று நமது நாட்டில் எது சரியா பிழையா என்பதா, அல்லது மறுப்பதா, அல்லது மக்கள் தீர்ப்பிற்கு விடுவதா, என்ற இறுதி தீர்வை எடுப்பது பெண்ணே, அவர் தான் நமது ஜனாதிபதி சந்திரிகா. ஒரு தடவை அல்ல இரு தடவைகள் ஜனாதிபதியாக வந்த பெண் என்ற பெருமையை பெற்றவர். மூ ன்றாவது தடவையாகவும் வரக் கூடிய தகுதிகள் இருப்பினும் இலங்கை அரசியல் திட்டத்தில் அப்படி ஒரு ஏற்பாடு இல்லை.

நமது அண்டை நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கே சோனியா காந்தியை அவரின் தனித்திறமை காரணமாக காங்கிரஸ் கூட்டணித் தலைவியாக, ஆளும் கட்சியை நிர்வகிப்பவராக இருக்கிறார். அவரின் பெருந்தன்மை காரணமாக ஒரு ஆணையே பிரதமராக்கினார். அவரே பிரதமராக இருந்திருக்க முடியும். நாடு எது விதமான குழப்பமும் அடையக் கூடாது என்று நினைத்ததால் அவரின் பதவியை விட்டுக் கொடுத்தவர். ஒரு வெளிநாட்டு பெண்மணியாக இருந்தும் இந்தியாவில் பிரதமராக உயர்ந்தவர்.

அடுத்து ஜெயலலிதா நடிகையாக இருந்து அரசியலில் உட்பிரவேசித்தவர். தமிழ் நாட்டையே ஒரு கலக்கு கலக்கிய பெண்மணியாக இருக்கிறார்.

பூலான்தேவி சிறு வயதில் ஏற்பட்ட வடுக்கள் காரணமாக பெரும் கொள்ளைக்காரியாக மாறி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பெண்மணி. பிறகு அரசியலில் புகுந்தவர்.

எங்கள் மலை நாட்டில் வாழும் பெண்கள் பல தடைகளை உடைத்தெறிந்து வேட்பாளராக நிற்கவில்லையா?

*திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்*

ஈன்ற பொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிடப் பெரிது மகிழ்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரட்டை அரங்கம்:
இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது.

# III

என்றும் இல்லாமல் திடீர் என இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகின்றது என்னும் தலையங்கமே தற்போதய தேவையை ஒட்டியே வந்திருக்கின்றது உங்கள் அனைவருக்கும் தெரியும். தொலைக்காட்சியூடாக பார்த்திருப்பீர்கள். இந்தியாவிலும் சரி நம் நாட்டிலும் சரி பாராளுமன்றத்தில் எமது தலைவர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் எம்மால் அனுப்பப்பட்டவர்கள் நடந்துகொள்ளும் விதம்பற்றி. எவ்வளவு கீழ்தரமான முறையில் நடக்கின்றார்கள். அவர்களுக்குப் பதிலாக 50% பெண்கள் சென்றிருந்தால் அங்குள்ள அங்கத்தவர்கள் சிறிது நாகரீகமாக நடப்பார்கள்.

மற்றும் ஒரு பெண்ணிற்கு தன் வீடு, பாடசாலை, அலுவலகம் என்று மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை நேரடியாக சந்திக்கும் அனுபவம்உண்டு. உதாரணம்: வீட்டுவாடகை, பொருட்களின் விலைவாசி, பிள்ளைகளின் பாடசாலைத் தேவைகள், அவர்கள் வேலையற்றிருந்தால் விவாகம். இப்படி பல பிரச்சனைகளை எதிர்கொண்ட அனுபவம் உண்டு. நன்கு கற்றவர்களாக இருந்து, பொறுமை, சாந்தம், அன்பு, ஆளுமை என்ற பண்புகள் நிறைந்த பெண்ணானவள் கிராமாட்சி மன்றம், நகராட்சி மன்றம், பாராளுமன்றம் என்னும் இடங்களில் அங்கத்தவராக இருக்கவேண்டிய சூழல் இப்போது காணப்படுகிறது. ஒரு வகுப்பில் ஆண், பெண் என கலந்து மாணவர் இருப்பதற்கும், தனி ஆண் மாணவர்கள் மட்டும் இருப்பதற்கும், நிறைய வித்தியாசம் உண்டு. தனிய ஆண்கள் இருக்கும் வகுப்பில் சத்தம், அடிதடி சண்டை என பல பிரச்சனைகள் உண்டு. ஆனால் இருவரும் கலந்த வகுப்பறைகளில் சிறிது கட்டுப்பாடு இயற்கையாகவே அமைந்துள்ளது.

நீதி மன்றத்தை எடுத்தோமானால், அங்கு கையில் தராசுடன் நிற்பது நீதி தேவதை. இதில் இருந்து என்ன தெரிகின்றது. பொண்களிடம் நீதியை நிலை நாட்டும் பண்பு இயற்கையாகவே உள்ளது. எனவே நீதியை நிலைநாட்ட நாம் அரசியலில் புகுவதற்கு தக்க தருணம் இப்போது காணப்படுகிறது.

அன்றைய பாண்டிமாதேவி, மங்கயற்கரசி போன்ற அன்பும், பண்பும், ஆற்றலும் நிறைந்த பெண்கள் பலர் எம் மத்தியில் உள்ளார்கள். அவர்கள் கட்டாயமாக தற்போதைய எமக்கு அனுசரணையான சூழலை பாவிக்கவேண்டும்.

வீட்டை சரியாக கவனிக்கும் பெண்தான் நாட்டைக் கவனிக்க முடியும். வீட்டில் இல்லாத வன்முறையா? எப்படிப்பட்ட வீட்டையும் சமாளிக்கும் பெண் நாட்டையும் சமாளிக்கலாம். பிரச்சனைகளைக் கண்டு பயந்து ஒதுங்குவது மடமை.

பரமேஸ்வரி பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரட்டை அரங்கம்:**
இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது.

## IV

ஆம்! ஆண், பெண், இருவரும் ஒரே பாடசாலையில், ஒரே பாடம் கற்கிறார்கள். அதோடு இன்றைய கல்விப் பாடங்கள் மிகவும் கஷ்டமான பாடங்கள். மிகவும் கஷ்டப்பட்டுப் படிக்கிறார்கள். பெண் என்பவள் பூமிக்குச் சமானம். பொறுமை, விவேகம், ஆலோசனை இவை பெண்ணிற்கு ஆணை விட கூடுதலாக உண்டு. ஆண் பெண்ணை விட தைரியசாலியாய் இருக்கலாம். ஆனால் சில விஷயங்களை படபடத்து, அவசரப்பட்டு, ஒன்றையும் ஆராயாமல் மிக ஆவேசத்துடன் குழப்பி விடுவார்கள். ஆனால் பெண் என்பவள் கூர்மையோடு ஆராய்ந்து எந்த அலுவலையும் சீராக முடிப்பாள். எவ்வளவு கஷ்டப்பட்டும் நாம் பெண்ணிடம் இருந்து ஓர் இரகசியத்தை அறியமுடியாது. பெண் மிகவும் ஆழமானவள். சந்திரிகா, ஜெயலலிதா, என்னும் அனேக பெண்கள் அரசியலில் பங்கேற்றுக் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்கள். உண்மையிலே அதிகம் படித்துப் பட்டம் பெற்ற விவேகம் உள்ள பெண், ஒரு தடையும் இன்றி அரசியலில் பங்கேற்கலாம்.

ஆனாலும் பெண்ணுக்கு நான் பெரும் பட்டதாரி அரசியலில் ஈடுபட்டு இருக்கிறேன் என்ற கர்வம் ஒருபோதும் இருக்கப்படாது. எப்படியும் தன் கணவன் கடமை, பிள்ளைகள் கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும். நேர்மை, நீதி, இரக்கம், பண்பு பொறுமை இவையாவும் ஓர் நன்கு படித்த பெண்ணுக்கு இருக்குமே என்றால் அந்தப் பெண் அரசியலில் பெரும் பங்கு ஏற்கலாம். பொறுமை நன்கு உள்ள எந்தப் பெண்ணும் எந்த இடத்திலும் வேலை செய்யலாம். இதோ ஒரு பாட்டு:

பெண்கள் இல்லையானால் நல்ல வாழ்வும் உண்டோ ஐயா!
ஆங்கிலக் கல்வி கற்றாலும், ஆபீஸ் வேலை பார்த்தாலும்,
காரை ஓட்டிச் சென்றாலும், மனைவி என்றேதான்,
பத்து மாதம் சுமப்பவள் அம்மா, பால் ஊட்டி வளர்ப்பவள் அம்மா,
பாசத்தோடு அன்னம் ஊட்டுவாள் தாய்
என்ற சொல்லுக்கு மேல் ஏதும் உண்டா?

அப்படிப்பட்ட தாய் அரசியலில் ஈடுபடுவதை ஒருவருமே குறை சொல்ல முடியாது.

நன்றிகள் பல.

*திருமதி சத்ரியலட்சுமி சிவலிங்கம், J-3-5 அன்ரசன் தொடர்மாடி, கொழும்பு 5*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

## இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படவில்லை

1. இன்று பெண்கள் கல்வி கற்று பல துறையிலும் முன்னேறி **பாரதியார் விரும்பிய புதுமைப் பெண்களாக** வளர்ச்சி பெற்று வருகின்றார்கள். ஆசிரியர் தொழில், வைத்தியம், பொறியியல், ஊடகவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற பல துறைகளிலும் பொலிவுடன் விளங்குகின்றார்கள்.

2. ஆனால் இன்று பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு ஏற்ற சூழல் காணப்படுகிறதா என்பதை ஆராயும் போது காணப்படவில்லை என்று தான் கூறவேண்டி உள்ளது. இன்று சில பெண்கள் அரசியலில் ஈடுபட்டு உயர் பதவிகளில் இருப்பது உண்மையே. ஆனால் பொதுவாக பெண்கள் பரந்த அளவில் அரசியலில் தீவிரமாக ஈடுபடும் நிலை இப்போது இல்லை.

3. இன்று சனத்தொகையில் **50 வீதத்துக்கு மேல் பெண்கள்** தான் உள்ளனர். ஆனால் பாராளுமன்றத்திலோ அல்லது பிரதேச சபையிலோ பெண்களின் வீதம் என்னவென்று பார்த்தால் **5 வீதத்திலும்** குறைவாகவே உள்ளனர். இதற்கு காரணம் அரசியலில் புகுந்துள்ள வன்முறை கலாசாரமும், மனப்பூர்வமான சுதந்திரம் எல்லாருக்கும் கொடுக்கப்படாமையும் ஆகும்.

4. பேச்சளவிலும், எழுத்தளவிலும் பெண் சுதந்திரம் பிரபலமாக இருந்தாலும், உண்மையான சுதந்திரம் இன்னும் பெண்ணுக்குக் கிடைக்கவில்லை. வீட்டிலும் சரி, சமூகத்திலும் சரி, ஒரு பெண் அரசியலில் தீவிரமாக இறங்கமுயலும் போது அவள் எதிர்பார்க்கும் சம்மதம் கிடைப்பது இல்லை. அப்படி இறங்கினாலும் தேவையான ஒத்துழைப்பு கிடைப்பதும் இல்லை.

5. இன்று பெண்களை மதிக்கும் பண்பு அருகிவருகிறது. ஒரு நாட்டில் பெண்களின் பாதுகாப்பும், பெண்களை மதிக்கும் பண்பும் எவ்வளவு சிறப்பாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அந்த நாடு நாகரிகம் சிறந்த நாடு என்று கூறப்படும். ஒரு இளம் பெண் உடல் நிறைய நகை அணிந்து நாட்டின் வீதிகளில் அர்த்த இராத்திரியில் நடந்து செல்ல முடியுமாயின் அதுவே சிறந்த நாடு என்று அறிஞர் கூறுவர். **காந்தியடிகள் கனவு கண்ட இராம இராச்சியம்** இதுவே ஆகும்.

6. இன்று எமது நாட்டில் பகல் வேளையில் கூட தனியாக ஒரு பெண் வீதிகளில் நடமாட முடியத நிலை இருக்கின்றது. காடையருடைய வம்பு பேச்சுக்கும், கேலிக்கும் ஆளாகும் நிலை உள்ளது. அண்மையில் **எமது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் அதியுயர் பீடமான பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழப்பத்தின் போது பல அங்கத்தவர்கள் நடந்து கொண்ட முறையினால் பார்வையாளராக வந்திருந்த பல பாடசாலை மாணவிகளை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

7. இந்நிலையில் பெண்கள் அரசியலில் ஈடுபட்டு தமது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்க கூடிய சூழ்நிலை உள்ளதா என்பதை சிந்தித்து பாருங்கள்?

8. பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மக்களின் பிரதிநிதியாகவே அங்கு வந்து உள்ளனர். ஆதலால் ஒவ்வொருவருக்கும் தமது கருத்துக்களை பண்பான முறையில் அச்சமின்றி எடுத்துக் கூறுவதற்கு சட்டப்படி உரிமையுள்ளது. அதை தடுத்து வன்முறை மூலம் அவர்களை மானபங்கப்படுத்தக் கூடிய சூழ்நிலை இருக்கும் போது பெண்கள் எவ்வாறு அரசியலில் பங்குபற்ற முடியும்?

9. அது மாத்திரம் அன்றி பாராளுமன்ற கூட்டத்துக்கே போகமுடியாது அங்கத்தவரை பலாத்காரமாக தடுத்து வைக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டு இருந்ததை காணலாம். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களையும் மாற்றுக் கருத்துடைய அரசியல்வாதிகளை சுட்டுக் கொல்லும் நிகழ்ச்சிகளும் எமது நாட்டில் நடைபெற்று உள்ளன. ஒழுக்கமான, பண்பான அரசியல் நாகரிகம் நாட்டில் விளங்கும் நிலை ஏற்பட்டாலே பெண்கள் அரசியலில் பங்கு பற்றலாம்.

திருமதி விமலா மணிவாசகன்

திருமருகல்

திருமருகலுக்கு அருகில் வைப்பூர் என்னும் ஊர். அதில் தாமன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான் அவனுக்கு ஏழு பெண்கள். மூத்த மகளை தன் மருமகனுக்கு கொடுப்பதாக கூறினான். பின் தன் வாக்கை மறந்தான். பணம் பெற்று வேறு ஒருவனுக்கு கொடுத்தான். இங்ஙனமே மற்ற ஐந்து பெண்களையும் கொடுத்து விட்டான்.

ஏழாவது பெண் உள்ளம் தளர்ந்தாள். தாய், தந்தையருக்குத் தெரியாமல் மருமகனோடு உடன் வந்துவிட்டாள். வந்தவர்கள் திருஞானசம்பந்தர் இருந்த மடத்தில் தங்கினார்கள். இரவில் துயிலும்போது பாம்பு கடித்து மருமகன் இறந்தான்.

அந்தப் பெண் சிவன் அருளையே சிந்தித்து புலம்பி அழுதாள். அவ்வொலி திருஞானசம்பந்தருக்கு கேட்டது. அவர் அங்கு சென்றார். அப்பெண்ணைத் தேற்றினார். பின் மருமகனின் விடம் தீர்ந்து எழுந்து நிற்கச்செய்ய எண்ணினார். இறைவனை நினைத்து பதிகம் அருளி பிரார்த்தித்தார். இறைவன் அருளால் அவன் எழுந்தான். அவ்விருவருக்கும் மணம் முடித்து வைத்தார். (குறிப்பு: பக்கம் 30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Do you know / Amazing facts

1. 'Dail' is the Irish word for Assembly. The Dail Eireann (Irish Assembly) has 144 members, who are elected every five years.
2. Flower names have interesting history. "Daisy" comes from old English 'day's eye' because it opens in the morning. 'Dandelion' comes from the French 'dent de lion' meaning Lion's tooth from the shape of its leaves.
3. A decibel is actually the tenth of a bel which is rarely used. The unit was named after Alexander Graham Bell the inventor of the telephone.
4. Male deer are called stags, bucks or harts. Female deer are called hinds or does.
5. The delta of a river got its name from its triangular shape. It was named after the Greek letter D.
6. Diamond is made of carbon, and is the hardest mineral in the world. They are used in cutting and grinding tools.
7. A diesel car or locomotive has a diesel engine that burns diesel oil. They were named after Ruddf Diesel (1858 - 1913) a German Engineer.
8. There are two main types of ducks, dabbers which feed on the surface of water and divers which swim under water to get food. A Bombay duck is not a duck but a kind of dried fish.
9. The Fahrenheit scale was named after its inventor Daniel Gabriel Fahrenheit (1680 - 1736) - A German.
10. The most famous collection of fables was supposedly written by a Greek slave over the 2500 years ago. His name was Aesop.
11. An ice floe comes from the Norwegian word 'flo' meaning a layer.
12. Focus comes from the Latin for hearth. or fire place which was the central point of a Roman home. The Goddess Verta at the hearth is worshipped by the family members.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. Most fossils are found in places that were once under or near seas.
14. 'Fortnight' is a shortened form of the old English words, "Feowertiene niht" which meant 'fourteen nights: / 2 weeks.
15. Old faithful in yellow stone national Park in N.W.U.S. is a famous geyser. It is called old faithful because it erupts at the same time every day.
16. Until the 17th Century, Giraffes were called 'cameleopards' because of their camel-like necks and leopard like spots.
17. Grasshoppers can jump up to 20 times the length of their own bodies.
18. Guinea Pigs are rodents not pigs and they are originally from Peru not Guinea.
19. The guillotine was first used during the French Revolution (1789 - 1795) and was named after its inventor Dr. Joseph Guillotine.
20. Handsome once meant 'easy to handle'. Then the meaning changed to plasant—the present meaning is, "pleasant to look at, noble, gracious or generous'.
21. Some animals have special words for their young males, the females, the group, and their dwelling. For example a young hare is called or leveret, a male hare is a buck, a female is doe. A group of hares is called a drove - and their home is farm.
22. A group of hawks is called a cast of hawks.
23. 'Hieroglyphics' comes from two Greek words, 'hieros' meaning sacred or priestly and 'glyphies' meaning caring or writing. The Greek belivevedaly the Egyptian priests understood and used this system of writing.
24. 'Hooligans' comes from the name of an Irish family that lived in S. E. London in the 19th century.
25. A hersen height is measured in hands not feet. A hand is 10 centimeters

Compiled by Thilaka Vivekananda Wijeyaratnam
Source: Children's illustrated Dictionary.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமதி தையல்நாயகி கருணானந்தன்

பழைய மாணவி - யாழ் இந்து மகளிர் கல்லூரி 1943 - 1946

குஞ்சக்கா, குஞ்சக்கா என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட தையல்நாயகி என்பவர். நீராவியடியைச் சார்ந்த தம்புமாஸ்டர் தம்பதிகளின் அருமைப் புதல்வியாவர். இவருடைய மூத்த சகோதரிகள் நல்லநாயகி, பரமேஸ்வரி என்பவர்கள். இளம் பராயத்திலேயே அமரரானார்கள். இவருடைய தமையனார் சேனாதிராஜா என்பவரும் அண்மையில் காலமானார். இவருக்கு இளையவர்களான ஜெகதீஸ்வரி பாலசந்திரன், தில்லைராஜா என்பவர்களும் காலமாகிச் சில வருடங்கள் ஆகின்றன. இந்நிலையில் இவர் வழமைபோல் மனத்தென்போடு யாவருக்கும் எந்நேரமும் எக்கஷ்டத்திலும் கைகொடுத்து வந்தார்.

1948ல் இவர் சொந்த மச்சினனான ஐயாத்துரை கருணானந்தனைக் கைப்பிடித்தார். அவர்களுக்கு நளாயினி, சந்திரமௌலி, பாலகுமார் என்ற மூன்று பிள்ளைகளும் திருமகள் என்னும் வளர்ப்பு மகளும் இருந்தனர். சுமார் 14 ஆண்டுகளுக்கு முன் தன் அருமை மூத்த புதல்வனான சந்திரமௌலியையும் பறி கொடுத்தார்.

எனினும் அவரின் உதவும் மனம் வற்றவில்லை. யார் எப்போது என்ன உதவி கேட்டாலும் மனம் சலியாது உதவி வந்தார்.

பிள்ளைகள் எல்லாரும் வெளிநாடு சென்றபின் கணவரையும் இழந்த நிலையில் சாரதா சமித்தி நடாத்தி வரும் மாதர் இல்லத்தில் சேர்ந்து எல்லோருடனும் சந்தோஷமாக இருந்தார்.

இவர் மிகவும் விரும்பியது சங்கீதமே. நண்பர் உறவினர் வீடுகளில் மரணம் எற்பட்டால் அங்கு உடனே சென்று தேவாரம் பாடி இறந்தவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பார்.

சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் திடீரெனத் தன் வீட்டிற்குச் செல்லவேண்டுமெனத் தீர்மானித்து யாழ்ப்பாணம் சென்றார். அங்கு நோய்வாய்ப்பட்டு இரு மாதங்கள் அரச வைத்தியசாலையில் இருந்தார்.

மார்கழி 26 சுனாமி தினம் வெள்ளத்தில் பலர் அள்ளுப்பட்டு இறந்து யாழ் வைத்தியசாலைக்கு எடுத்து வருவதைப்பார்த்து மனம் மிகப் பாதிக்கப்பட்டார். அன்றிரவே அவர் ஆத்மா இறைவனடி சேர்ந்தது.

அவருடைய ஆன்மா சாந்தியடைய எமது பிரார்த்தனைகள்.

பழைய மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வெள்ளிவிழா

யா / யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தனது வெள்ளிவிழா மலர் வெளியீட்டையும், தனது 2004ம் ஆண்டு பரிசுத்தினத்தையும் 2004.11.20ம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு ஆரம்பித்தது.

அன்று வானமே ஆசீர்வதிப்பது போல் அடைமழை பொழிந்தது. மழை சற்று ஓய்ந்ததும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் ஆகியோர் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபரின் அறையில் இருந்து மாணவிகள் தீபம் ஏந்தி முன் செல்ல அதிபராலும், ஆசிரியர்களாலும், அழைத்துச் செல்லப்பட்டு நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் கோயில் பூசையில் பங்குபற்றினார்கள். பின் அவர்களுக்கு மாணவிகளால் பூமாலை அணிவிக்கப்பட்டு, அங்கிருந்து விசாலாட்சி மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். மண்டபவாயிலில் அவர்களுக்குப் பூச்செண்டு வழங்கி மண்டபத்தினுள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். சற்று ஓய்ந்திருந்த மழையும் மறுபடி பொழிந்தது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறுமிகள் பெயர்களைக் கூறி அழைக்க மங்கள விளக்கேற்றப்பட்டது. இறை வணக்கம், அக வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புப் பாடல் பாடப்பெற்று விருந்தினர்களை மேடைக்கு அழைத்துச் சென்று அமரவைத்தார்கள். மாணவர் தலைவி, செல்வி. துளசிகா ஸ்ரீவரதன் வரவேற்புரையும், பிரதம குரு, யாழ். இந்து மகளிர் கல்லூரியில் உள்ள நடுத்தோட்ட விநாயகர் ஆலயம், சிவஸ்ரீ பா. நகுலேஸ்வர ஐயா அவர்கள் ஆசியுரையும், யாழ். இந்து மகளிர் கல்லூரி, அதிபர், திருமதி. சரஸ்வதி ஜெயராஜா அவர்களும், நல்லூர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சத்தியலஷ்மி காங்கேயன் அவர்களும், வாழ்த்துரை வழங்கினார்கள்.

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர், அவர்கள் வெள்ளிவிழா மலர் வெளியீட்டுத் தலைமையுரையினை நிகழ்த்தினார்கள். முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் அவர்கள் வெளியீட்டுரையினை நிகழ்த்தினார்கள். வெள்ளிவிழா மலர் முதல் பிரதியை பிரதம விருந்தினரிடமிருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் பெற்றுக்கொண்டார், கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் அதிபர், திரு. இ. மகேந்திரன் அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். இதழ் ஆசிரியர் திருமதி. அனுசியா விஜயநாதன் அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள்.

நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும் பொழுது மண்டபத்தில் பிரசன்னமாகி இருந்த யாவருக்கும் சிற்றுண்டியும், பானமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகிக்கப்பட்டது.

யா / யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர், திருமதி. தனரஞ்சனி துரைசிங்கம் அவர்கள் 2004ம் ஆண்டு பரிசுத்தின அதிபர் அறிக்கையினை வாசித்தார்கள். செல்வி. துளசிகா ஸ்ரீவரதன் தமிழ் பேச்சினையும், செல்வி. மதுரா கணேசநாதன் ஆங்கில பேச்சினையும், வழங்கினார்கள். பாடசாலையின் நலன் விரும்பி (யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்பு, உபபொருளாளர்) திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். யாழ்ப்பாணம், கல்வி வலயம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. நாகலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். தவிர்க்க முடியாத காரணத்தினால் அவரால் சமுகமளிக்கமுடியவில்லை. மகரகம, தேசிய கல்வி நிறுவகம், உதவிப் பணிப்பாளர் நாயகம் உயர்திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார்கள். திருவாட்டி தையல்நாயகி சோமசுந்தரம் அவர்களும், திருவாட்டி விமலா மணிவாசகன் அவர்களும், பரிசில்கள் வழங்கினார்கள்.

வருகை தந்திருந்த விருந்தினர் யாவருக்கும் மேடையிலும் மாலை அணிவிக்கப்பட்டது.

கலை நிகழ்வுகளாக :- (1) பூஜை நடனம். (2) நடனம் தனி - தேசிய மட்டம் 2ம் இடம் செல்வி. சரவண்யா தெட்சணாமூர்த்தி. (3) Drama (Living in Harmony)-District level 2nd. (4) கிராமிய நடனம் - மாவட்டமட்ட "அழகெழல்" போட்டியில் 1ம் இடம். (5) இசையும் அசைவும் - மாவட்டமட்டம் 1ம் இடம். செல்வி ஸ்ரீதரா வரதராஜா. (6) Group song- English- Divisinoal level 2nd. (7) மீனவர் நடனம் - மாவட்டமட்ட "அழகெழல்" போட்டியில் 1ம் இடம். (8) "புத்திமான்" சிறுவர் நாடகம் - வலயமட்டம் 2ம் இடம். என்பன இடம்பெற்றன.

பகுதித்தலைவர் திருமதி புஸ்பவதி வரதராஜா அவர்கள் நன்றி கூறினார்கள்.

பாடசாலைக் கீதம் பாடப்பெற்றது.

கலை நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும்போதே இருபிரிவுகளாக மதிய போசனம் வழங்கப்பட்டது. யாழ். இந்து மகளிர் கல்லூரி சாரண இயக்கத்தினரின் உதவியுடன் ஆசிரியர்கள் பரிமாறினார்கள்,

சிறப்பாக நடைபெற்ற விழா பி.ப 4.30 மணிக்கு நிறைவெய்தியது.

வடிவமைப்பு
*நலன்விரும்பி*
*யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPIDER WARNING

Three women in North Florida, turned up at hospitals over a 5-day period all with the same symptoms. Fever, chills, and vomiting, followed by muscular collapse, paralysis and finally, death. There were no outward signs of trauma. Autopsy result showed toxicity in the blood.

These women did not know each other, and seemed to have nothing in common. It was discovered, however, that they had all visited the same Restaurant (Olive Garden) within days of their deaths. The health department descended on the restaurant, shutting it down. The food, water, and air conditioning were all inspected and tested, to no avail.

The big break came when a waitress at the restaurant was rushed to the hospital with similar symptoms. She told doctors that she had been on vacation, and had only went to the restaurant to pick up her check. She did not eat or drink while she was there, but had used the restroom. That is when one toxicologist, remembering an article he had read, drove out to the restaurant, went into the restroom, and lifted the toilet seat.

Under the seat, out of normal view, was a small spider. The spider was captured and brought back to the lab, where it was determined to be the Two-Striped Telamonia (Telamonia dimidiata), so named because of its reddened flesh color. This spider's venom is extremely toxic, but can take several days to take effect. They live in cold, dark, damp climates, and toilet rims provide just the right atmosphere.

Several days later a lawyer from Jacksonville showed up at a hospital emergency room. Before his death, he told the doctor, that

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

he had been away on business, had taken a flight from Indonesia, changing planes in Singapore, before returning home. He did not visit (Olive Garden), while there. He did, as did all of the other victims, have what was determined to be a puncture wound, on his right buttock.

Investigators discovered that the flight he was on had originated in India. The Civilian Aeronautics Board (CAB) ordered an immediate inspection of the toilets of all flights from India, and discovered the Two-Striped Telamonia (Telamonia dimidiata) spider's nests on 4 different planes!

It is now believed that these spiders can be anywhere in the country. So please, before you use a public toilet lift the seat to check for spiders. It can save your life! And please pass this on to everyone you care about.

Source: Internet

OGA Canada Endowment Fund (with OGA Colombo)

| | |
|---|---|
| Balance as at 1st January, 2004 | 264,564.77 |
| Interest Credited | 18,237.45 |
| Less Withdrawals* | (60,000.00) |
| | 222,802.22 |

* Rs. 60,000/- was given to the College to cover part of the expenses towards dance competition held on 9th & 10th October 2004

Please refer Page No. 61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரத்து
# திருவாசக மடம்

திருவாசக மடம் 1958ஆம் ஆண்டில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்ற ஸ்தாபனத்தின் ஓர் அங்கமாக திருக்கேதீஸ்வரத்தில் தோற்றம் பெற்றது. ஈழத்து சிவனடியார் திருக்கூட்டத்தை சைவப் பணிக்கென ஸ்தாபித்த சரவணமுத்து சுவாமிகளே திருவாசக மடத்தையும் நிறுவி பரிபாலித்து வந்தார்.

சரவணமுத்து சுவாமிகள் 1906ஆம் ஆண்டு புங்குடுதீவில் பிறந்தார். குடும்பத்தில் ஒரு ஆண் பிள்ளையாக பிறந்த இவர் பின்னாளில் கொழும்பு சென்று வணிகத் தொழிலில் ஈடுபட்டு மிகுந்த பொருளீட்டினார். எனினும் இவரது உண்மையான தேடல் வேறு எங்கோ நாட்டம் பெற்றிருந்தது.

வாய்ப்புகள் எற்பட்ட பொழுதெல்லாம் இலங்கை, இந்திய தல யாத்திரைகளில் ஈடுபட்ட அவர் பல மகான்களையும் சைவ அறிஞர்களையும் சந்திக்க வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று அவர்களின் கருத்துகளாலும் வாழ்க்கை முறைகளாலும் கவரப்பட்டார்.

சரவணமுத்து சுவாமிகள் மகாத்மா காந்தியடிகள் கொழும்புக்கு வருகை தந்தபோது அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தார். இந்த நிகழ்வின் பின்னர் 'கதர்' துணியினால் ஆன வேட்டி மேல் அங்கி அணிவதையே தமது பழக்கமாக்கி அதையே இறுதிவரை பின்பற்றினார்.

சரவணமுத்து சுவாமிகள் இந்திய தலயாத்திரையின்போது தான் அவருக்கு மாணிக்கவாசக நாயனார் அருளிச்செய்த திருவாசகத்தை மகான்கள் அவருக்கு நலம்பட உரைத்திருக்க வேண்டும். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற வாசகத்தின் பொருள் உண்மையாயிற்று.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை பலமுறை நாடிச் சென்று தரிசித்து வந்த சுவாமிகளுக்கு அங்கே தரிசனத்துக்கு வருகின்ற அடியார்களுக்கு வசதியாக ஈழத்து சிவனடியார் திருக்கூட்டம் சார்பாக ஒரு மடத்தை ஸ்தாபிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற எண்ணம் வலுப்பட்டபோது திருவாசகத்தின்பால் ஏற்பட்ட ஈர்ப்பு "திருவாசகமடம்" ஆக தோற்றம் பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் விசேட தினங்களாகக் கொள்ளக் கூடியவை திருக்கோயில் உற்சவ நாட்கள், சிவராத்திரி மற்றும் திருவெம்பாவை தினங்கள். திருக்கோயில் உற்சவத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல சைவ பாடசாலைகளும் உற்சவ விழா உபயகாரர்களாக இருப்பதால் பாடசாலை மாணவர்கள் பெருமளவில் இந்த காலத்தில் திருக்கேதீஸ்வரம் செல்வர். இவர்களை வரவேற்று உபசரித்து தங்குமிடம் வழங்குவதில் முன்னின்ற மடங்களில் திருவாசகமும் ஒன்று. இருபத்திஐந்து நாட்கள்நடைபெறும் உற்சவ தினத்திற்கு வரும் சிவனடியார்களை ஒரே இரவில் பார்க்க வேண்டுமானால் அது திருக்கேதீஸ்வரம் 'சிவராத்திரி' விழாவாகத்தான் இருக்க முடியும். இந்நாளில் கோயில் வீதியில் உள்ள எல்லா மடங்களும் தமது கொள்கையின் விளிம்பிற்கு தள்ளப்பட்டு விடும்.

இத்தகைய நிகழ்வுகளை எதிர்கொண்டு சிவனடியார் தேவைகளை இயலுமானவரை கவனித்த மடங்களில் திருவாசகம் முன்னின்றது என்றால் அது மிகைப்படுத்தல் இல்லை.

யுத்த சூழ்நிலை காரணமாக திருவாசகமடம், திருக்கேதீஸ்வரத்தை விட்டு வெளியேற்றப்பட்டு கொழும்பில் வாழ்ந்த போதும் சுவாமிகள் தாம் திருக்கேதீஸ்வரம் போவதையும், மடத்தை நிர்மாணிப்பதையும் தமது கனவாகக் கொண்டிருந்தார். இதைப்பற்றி பலருடன் தமது விருப்பை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் 2003இல் திருக்கேதீஸ்வரம் புனருத்தாரணம் செய்யப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட இருந்தபோது தமது உடல் நலக்குறையையும் பொருட்படுத்தாது அங்கு செல்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடலானார்.

இந்நிலையிலேயே இவருடைய 97 ஆவது வயதில் சில தினங்கள் கடும் சுகயீனப்பட்டு உயிர் நீத்தார்.

சரவணமுத்து சுவாமிகள் இறையடி சேர்ந்த நாள் திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசகரின் குருபூசைத்தினம் அமைந்ததும் அவருடைய மரணக்கிரியைகள் நடைபெற்ற நாள் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு குடமுழுக்கு நடைபெற்ற தினமாக அமைந்ததும் இறையருள் அன்றி வேறு எதுவாக இருக்க முடியும்.

– நாராயணன்.

நன்றி: வீரகேசரி வெள்ளிக்கிழமை 2nd July 2004 பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

28–08–2004

# ஒரு தாய்க்கு மகளின் பிறந்த நாள் வாழ்த்து

பேரன்பு மிக்க எங்கள் அம்மாவுக்கு!

இன்று உங்கட்கு 78வது பிறந்த நாள், உங்கள் அன்பிலும், பாசத்திலும், அரவணைப்பிலும் திளைத்த பிள்ளைகள் உங்கட்குப் பிறந்த நாள் நல் வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவித்துக் கொண்டு, நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் நோய், துன்பம் இன்றி மகிழ்வுடன் இனிது வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் அன்பும், பாசமும் எங்கள் நெஞ்சில் என்றென்றும் பசுமையாக, நீங்கா நினைவுகளாக நிலைபெற்று நிறைந்து இருக்கும்.

பெரியவர்களை நாம் வணங்கும் போதும், வாழ்த்தும் போதும், அவர்களது இதயம் நெகிழ்ந்த ஆசிகள் எங்கள் வாழ்க்கையை வளம்படுத்துகின்றன.

ஐம்பொறிகளையும் அடக்கி ஆண்ட மனவலிமையை உங்களிடம் கண்டேன். சின் முத்திரை காண்பித்தே நால்வருக்கு உபதேசித்த தெட்சணாமூர்த்தி போல், வாழ்ந்து காட்டியே, வாழ்வின் இனிய தத்துவத்தை எங்கட்குப் புகட்டினீர்கள். அதனால் இன்று எங்களால் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது.

உங்களில் நான் கண்டு மகிழ்ந்த பண்புகயையும், உங்களைப் பார்த்து நான் என்னையே மாற்றிக் கொண்டதன்மைகளையும் எழுதாமல் இருக்க முடியாது. இறைவன் எமக்கு வழங்கிய கொடைகள் இரண்டு. ஒன்று இந்த உடம்பு, மற்றது இந்த உலகம். இந்த உடம்பைப் பெற்று வந்த நாம், இதனைப் பேணிப் பாதுகாப்பதுடன் நின்று விடாது, எமது உயிரின் வளர்ச்சிக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும், இந்த உடம்பையும், உலகையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அவற்றிற்கான அடிப்படையை உங்களுடன் வாழ்ந்த காலங்களில் பெற்றேன். அன்றைய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த நான் சுறுசுறுப்பு, வலிந்து பொறுப்புகளை ஏற்றல், ஏற்ற பொறுப்புக்களைச் சிறப்பாக ஆற்றல், இறைபக்தி, ஆன்மாவுக்கான தேடல் போன்ற பலவற்றைக் கற்றுக் கொண்டேன். அவை என் வாழ்க்கையை வளம் பெறவைத்தன. என் ஆன்மாவின் தேடலுக்கும் நிறைவை அளிக்கின்றன.

கூட்டுக் குடும்பத்தில் ஆலமரம் போல் எங்கள் அனைவரையும் தாங்கினீர்கள். வெளியே, உறவினர்கள் எவராவது சுகவீனம் உற்ற பொழுதோ அல்லது மூப்பு காரணமாக அவஸ்தைப்பட்ட காலங்களில் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தீர்கள். உறவினர்களின் பிள்ளைகள் பணி செய்தாலும் உங்கள் சேவை அவர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. நீங்கள். அவர்கட்கு அன்பாகவும் ஆதரவாகவும் செய்யும் சேவைகள் அந்த உள்ளங்கட்கு ஆத்ம திருப்தியைக் கொடுத்தது என்பது தான் உண்மை.

நேசிப்பது என்பது வெறும் செயல் அல்ல. அது ஒருவர் மனதில் இயல்பாகவே பூக்கும் ஆன்மார்த்த அன்பு, உங்கள் வாழ்க்கையில் நேசம் உங்கள் ஆன்மாவுடன் கலந்தே இருந்தது. அதனால் தான் உங்களால் அனை-வரையும் நேசிக்க முடிந்தது இது கடவுள் உங்கட்கு அளித்த கொடை என எண்ணுவேன்.

நீங்கள் வெற்றிகள், தோல்விகள், சந்தோஷங்கள், துக்கங்கள் அனைத்தையுமே ஆரவாரம் இன்றி ஏற்று வாழ்ந்ததைக் கண்டேன். உங்கள் எண்ணங்கள் பெரும்பாலும் உங்களைச் சுற்றியுள்ள சமூகத்தின் மீதான கடமை எது என அறிந்து அதைச் செயற்படுத்துவதிலும், அதைப் பற்றிய சிந்தனைகளிலுமே லயித்து இருந்தன. "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்" என்று உங்களைச் சொல்லலாம். நீங்கள் எதையுமே என் சொத்து என்று மற்றவர்கள் போல் சேர்த்து, சேமித்து வைத்திருந்ததை நான் காணவில்லை.

எல்லாவற்றையும் சரியாக, முறையாகச் செய்ய வேண்டும் என்பதில் நீங்கள் காண்பிக்கும் முன்மாதிரி, உங்களுடன், உங்களிடத்தில் வேலை செய்வோரிடத்தும், உங்களுக்கென ஒரு தனி மரியாதையை இயல்பாகவே ஏற்படுத்தியது. இரவு பகல், அல்லது நேர காலம் பார்க்காது, உங்களது சௌகரியத்தை அனுசரியாது, "செய்வன திருந்தச் செய்", என்ற படியும், செய்பவற்றை ஆன்மார்த்தமாகவும், செய்து முடித்து விடவேண்டும் என்ற அவாவுடனும் செய்து நிறைவேற்றுவது உங்கட்கே உரிய தனிச் சிறப்பு.

எவரிடத்து எந்த வேலை கொடுக்கலாம், எவ்வளவு வேலை பெற்றுக் கொள்ளலாம் என்ற மனக் கணிப்பு உங்கள் வெற்றிக்கு உதவிற்று. துணிச்சல் உங்கட்குத் துணை நின்றது. உங்கள் ஆத்மபலம் இறைவனையும் உங்கட்குப் பக்கபலமாக இருக்க வைத்தது. உங்கள் காலத்தில் பல உறவினர்கள் வாழ்ந்த போதிலும், உங்கள் பணிகளால் நீங்கள் என்னை ஈர்த்த அளவிற்கு வேறு எவருமே என்நினைவுகளில் பதியவில்லை. வாழ்க வளமுடன்.!

அன்புடன்
உங்கள் சங்கரி

எழுதியவர் – திரு. வை. இரகுநாதமுதலியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "என்னுடைய இந்த வெற்றிக்கு அடிப்படையே 'அவள் விகடன்'தான்!"

முழுக்க முழுக்க காட்டன் புடவைகளுக்காகவே ஒரு கடையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திவரும் ஒரு பெண்மணியைப்பற்றி, இரண்டு வருடங்களுக்கு முன்பு அவள் விகடனில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம். அதனைப்பார்த்து, தானும் அதுபோல புடவை பிசினஸ் செய்யவேண்டும் என்று ஆர்வத்தோடு நம்மை தொடர்பு கொண்டவர்தான் மிதுலா. இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப்பெண். இப்போது, இலங்கையில் புடவை பிஸினஸில் கொடிகட்டிப் பறக்கிறார் மிதுலா. கொழும்பு, யாழ்ப்பாணம் என்று இவரது கடைக்கு இரண்டு கிளைகள்!

சமீபத்தில் சென்னை வந்திருந்த மிதுலா நம் அலுவலகத்துக்கு வந்து, "'அவள் விகடனு'க்குத் தான் நன்றி சொல்லணும், என்னுடைய இந்த வெற்றிக்கு அடிப்படையே, அவள் விகடன் வெளியிட்ட அந்தக் கட்டுரைதான்.." என்று நெகிழ்ந்துபோய்ச் சொன்னார்.

## "நன்றி சொல்ல வந்தேன்!"

"கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். கைகொள்ளாத சம்பளம் என்றாலும், அந்த வேலையில் எனக்கு அவ்வளவு மனநிறைவு என்று சொல்ல முடியாது. மனதுக்கு மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய வேறு ஏதாவது செய்யணும் என்ற துடிப்பு இருந்தது. ஆனால், என்ன செய்யவேணுமென்று தெரியாமல் தவித்த அந்த நேரத்தில்தான்,'அவள் விகடனி'ல் அந்த கட்டுரையைக் கண்டேன். என் வாழ்க்கையையே அது மாற்றிவிட்டது!" என்றார்.

"இந்திய உடுப்புகளின்மேல் எப்போதுமே எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. அதிலும் புடவைகளை, உங்கள் ஊர்ப் பெண்களைப் போலவே வடிவாக உடுத்துவேன். இதைப் பார்த்துத் தாங்களும் இதுபோல உடுத்த வேண்டுமெனவும், என்னுடைய செலக்ஷன் எல்லாமே நேர்த்தியாக இருக்கிறது எனவும் எங்கள் ஆபீஸில் சொல்வார்கள். அதனால்தான் புடவை பிசினஸைத் தைரியமாகச் செய்யலாம் என்று தோணிப்போச்சு.

அப்பொழுதே நான் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தேன். நீங்கள் கொடுத்த முகவரியில் அந்தப் பெண்மணியைச் சந்தித்து, முதலில் இருநூறு புடவைகளை எடுத்துப்போனேன். என்னுடைய ஆபீஸிலும் ஜெனரல் சர்ஜனாக இருக்கும் என் கணவரின் ஹாஸ்பிடலிலும் உள்ள பெண்களுமே போட்டி போட்டு அள்ளிக் கொண்டனர். ஒரே வாரத்தில் எல்லாமே விற்றுப்போச்சு. மறுவாரமே இடம் பார்த்துக் கடை போட்டு, அதை கவனிக்க ஆட்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமித்துப் புடவைத் தொழிலை நிரந்தரமாக்கிட்டேன்!" – குரலில் அவ்வளவு குஷி.

முதல்முறை வாடிக்கையாளர் வந்து துணிகளைத் தேர்வு செய்கையிலேயே, அவரது விருப்பம் எனக்குப் புரிந்துபோகும். மறுதரம் அவர் வரும்போது, அவருக்கேத்த புடவைகள் என் கடையில் காத்திருக்கும். இப்படி ஆளுங்களின் பிரியத்தைப் புரிந்து நடந்துகொள்வதால், ஒரு தரம் 'கலாஞ்சலி' (இவரது கடையின் பெயர் இதுதான்!) வரும் ஆளுங்க, பிறகு வேறு இடத்துக்குப் போவதே இல்லை!" என்று பெருமையோடு குறிப்பிடும் மிதுலா, தான் பார்த்துவரும் வேலையை விட்டுவிட்டு, முழுமூச்சாகப் புடவை பிசினஸில் இறங்கப் போகிறாராம்!.

"சரியான நேரத்தில் எடுக்கப்படும் சரியான முடிவுகளில்தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கியிருக்கிறது என்பார்கள். இதைக்கூட நான் 'அவள் விகடனி'ல்தான் படித்தேன். அப்படி என் வாழ்க்கையில் சரியன ஒரு முடிவை எனக்கு அடையாளம் காட்டிய 'அவள் விகடனை' என்றுமே மறக்கமுடியாது!" – மனதின் ஆழத்திலிருந்து சொல்கிறார் மிதுலா.

அக்ஷயா

அவள் விகடன் 5
ஜூலை 30, 2004


# Kalanjali Sarees

Exclusive Kanjipuram & Cotton Sarees
H.O.: 30-1/14, High Street Center Building, W.A. Silva Mawatha,
Wellawatta, Colombo 6. Mobile: 0777-309983

B.O.: # 169, Ramanathan Road, Tirunelveli, Jaffna
Tel: 0777-627141


நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# இந்து சமயத்தில் சிவன்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஆன்றோர் வாக்கு அண்டசராசரங்கள் அனைத்திற்கும் தாய், தந்தையாராய் சக்தியும், சிவனும் விளங்குகின்றனர். என சிவபெருமானின் பெருமைகள் ஏராளமானவை. எளிமையான முறையிலே சிவனை நம் மனதில் நினைவிருத்த முடியும்.

கவிதைகள் மூலமாக, பக்திப் பாடல்கள் மூலமாக, மனதில் நினைப்பதன் மூலமாகவும் சிவனை நம் மனதிற்குள் நிலைநிறுத்த முடியும். அந்த முறையில் 64 லீலைகள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலினிலே, மந்த மலையை மத்தாக எடுத்துக் கொண்டு வாசுகி என்னும் பாம்பை கயிறாகத்திரித்து அமிர்த்தம் கடையத் தொடங்கினார்கள். அந்த வேளையில் பாம்பின் வாயில் இருந்து விஷம் பரவி எல்லோரையும் மயக்கமடையச் செய்தது. அதனால் பயந்த தேவர்கள், சிவபெருமானிடம் தஞ்சம் அடைந்தனர். சிவன் அந்த இடத்திற்குச் சென்று விஷத்தை கையில் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். உடனே தேவியார் அவர் கழுத்தை இறுக்கி பிடித்ததால் அந்த விஷம் கழுத்திலேயே நின்றுவிட்டது. அதனால் "நீலகண்டன்" என்ற பெயரையும் சிவன் பெற்றார். அவ்வாறாக தேவர்களைக் காத்து அருளினார். அதுவே பிரதோஷ விரதம் என அநுட்டிக்கப்படுகிறது.

சிவபெருமானுக்கு இயல்பாக உள்ள திருமேனி மூன்று, ஒன்று அருவத் திருமேனி, இது கண்ணால் காண முடியாது. ஞானத்தால் மட்டுமே காணக்கூடியது. மற்றது உருவத் திருமேனி, இது கை, கால்களுடனும் ஆயுதங்களுடனும் கூடிக்காணும் வடிவில் உருக்கொண்டு விளங்குவது, மூன்றாவது அருவுருவம். இவ்வடிவத்திற்கு கை, கால்கள் இல்லை, ஆனால் கண்ணால் காணும் வண்ணமும் கைகளால் தொட்டால் உணரும் வண்ணமும் அமைந்த தோற்றமே சிறப்பிலும் சிறப்பு. எனவேதான் காசியில் விஸ்வநாதனாகவும், கயிலையில் சங்கரன் ஆகவும், திருவண்ணாமலையில் அண்ணாமலையாராகவும் காட்சி தருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவத் திருமேனி சைவத்தின் தனிச்சிறப்பு, அருவுருவத் திருமேனியாக விளங்கும் சிவனை கோவில்களில் ஆண்பால்களால் அமைக்கின்றோம். 'சிவாயநம' என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருபோதும் இல்லை. என்பது அருள்வாக்கு.

ஞானிகளும் சித்தர்களும் தாங்கள் சித்தாந்தத்தில் எவ்வாறு வழிபாடு செய்தார்கள் என்பதை பாடல்கள் மூலமாக நமக்கு உணர்த்தி உள்ளார்கள். இறைவனை உள்ளத்தின் உள்ளே கண்டு தாம் பெற்ற பேரின்பத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்து உரைத்தனர்.

தமிழ் வேதமாகிய தேவாரத்தை அருளிய மூவர்களும் ஈசனைத் தம்முள்ளே கண்டு நெஞ்சம் நெக்குருகி போற்றி வழிபட்டனர்.

உமையாளிடம் ஞானப்பால் உண்ட ஞானக் குழந்தை திருஞானசம்பந்தர்.

திருமதி. சத்தியலெட்சுமி சிவலிங்கம்
பழைய மாணவி
யாழ். இந்து மகளிர் கல்லூரி

திருவாலவாய் திருநீற்றுப் பதிகம்

சமய சாதனங்களில் முதலாவதாக விளங்குவது திருநீறு. ஞானசம்பந்தர் இதன் பெருமையை உணர்த்தும் நிலையில் ஒரு திருப்பதிகம் அருளியுள்ளார். பாண்டிநாடு அடைந்த ஞானசம்பந்தர் மன்னன் உற்ற தீப்பிணி தீரச்சாற்றிய பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.

திருவாலவாயர்ன் திருநீறு மந்திரமாகவும், மருந்தாகவும் பயன் தருவது. முத்திதரும் சிறப்புடையது என்றும், பேணி அணிபவர்க்குப் பெருமை தருவது என்றும், அருந்தவத்தோர்களுக்கு ஆசையை நீக்குவது என்றும், துன்பம் போக்கி இன்பம் அளிக்கவல்லது என்றும், திருநீற்றின் சிறப்பை இத்திருப் பதிகத்துள் ஞானசம்பந்தர் உணர்த்தியருளுகிறார்.

முதல் ஆறு பாடல்களின் இறுதிவரிகளில் – திருஆலவாயான் திருநீறே – என்றும், இடுத்த ஐந்து பாடல்களின் இறுதிவரிகளில் ஆலவாயான் திருநீறே – என்றும், இருபிரிவாக வருவதைக் கொண்டு முதலில் வலது பக்க வெப்பைப் போக்கியதும், பின்னர் திருநீறு பூசிய அளவில் இடப் பக்க வெப்பைப் போக்கியதும், குறிப்பிடப்படுகின்றமை கண்டு மகிழலாம்.

தொகுப்பு: திருமதி விமலா மணிவாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு – பதினோராம் ஆண்டு (2004) அறிக்கை (07.02.2004 தொடக்கம் 05.02.2005 வரையும்)

சங்கத்தின் பத்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 2004ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 7ஆம் திகதி கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்தில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 17 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமான சமாதானம் வேண்டியும் வன்முறையில் இறந்தோருக்கு அஞ்சலியாகவும் 2 நிமிட நேரம் மௌனப் பிரார்த்தனை செய்தோம்.

நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் – திருமதி லீலா நாகரத்தினம்

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு

| | |
|---|---|
| தலைவி | – திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| உபதலைவர்கள் | – செல்வி சறிசொரூபவதி நாதன் |
| | – திருமதி திலகா விரசிங்கம் |
| | – திருமதி ருக்மணி அரசரத்தினம் |
| பொதுச்செயலாளர் | – திருமதி சிவகாமி அம்பலவாணர் |
| உதவிச்செயலாளர்கள் | – திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் |
| | – திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் |
| பொருளாளர் | – செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| உதவிப்பொருளாளர் | – திருமதி விமலா மணிவாசகன் |
| நிர்வாகக்குழுவினர் – | செல்வி ஞானலக்ஷ்மி பாலசிங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொன்மலர் கந்தசாமி
திருமதி சிவச்செல்வி சிலலோகநாதன்
திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
திருமதி நந்தினி மோகன்
திருமதி கமலா கனகசபை
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி மல்லிகாதேவி சரவணபவான்
திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன்
திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்
திருமதி சத்தியலக்ஷ்மி சிவலிங்கம்
திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்
திருமதி இந்திராணி சோமசுந்தரம்
திருமதி தயாநிதி செல்வநாயகம்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி தற்பராதேவி தில்லைநாதன்
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி திலகா விஜயரத்தினம்
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
திருமதி கமலருளேஸ்வரி சர்வானந்தா
திருமதி வத்சலா நாகலிங்கம்
திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம்
திருமதி தயாநிதி உதயகுமார்
திருமதி மனோன்மணி அருணாசலம்

கணக்குப் பரிசோதகர் – கணேசலிங்கம் அண்ட் கொம்பனி, சார்ட்டட் அக்கவுண்டன்ஸ், 16-B, Schofield Place, கொழும்பு 3

இந்த வருடத்தில் பின்வரும் முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன

1. புது வருட மலிவு விற்பனை ஒன்றை நடத்தினோம்

2. இராப் போசன விருந்து ஒன்றை Greenlands Hotel இல் நடத்தினோம்.

3. உளவள நிபுணர் கெட்சி சண்முகத்துடன் சந்திப்பு, யாழ் நாதம் இதழ் 10 வெளியீடு, சங்க அங்கத்தவர்களின் அரட்டை அரங்கம் ஆகியவற்றை நடத்தினோம்.

4. வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வை நடத்தினோம்.

5. கல்லூரியின் சிறந்த மாணவிக்குப் பொன்விருது வழங்கினோம்.

6. தமிழ்த்தினப் போட்டிக்கு கொழும்பிற்கு வருகை தந்த எங்கள் கல்லூரி மாணவிகளை உபசரித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி நிதியம் ஒன்றை தேசிய சேமிப்பு வங்கியில் திறந்தோம்.

8. யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி நிதியம் ஒன்றை தேசிய சேமிப்பு வங்கியில் திறந்தோம்.

9. எங்கள் கல்லூரி அதிபர் திருமதி விமலா மணிவாசகனை கொழும்புச் சங்கத்தின் சார்பில் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கு அழைத்தார்.

10. ஆரம்பப் பாடசாலை அதிபர் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கு எங்கள் சங்கத்தின் சார்பில் திருமதி விமலா மணிவாசகனை அழைத்தார் *(படம் 2: முன் உள்அட்டை)*.

11. திருமதி விமலா மணிவாசகன் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு அதிதியாகச் சென்றார் *(படம் 1: முன் உள்அட்டை)*. இப் பாடசாலையின் வெள்ளி விழா மலர் பிரசுரிப்பதற்கும் உதவினார்.

12. எங்கள் சங்கம் ஸ்தாபித்த www.jhlc.lk என்ற கல்லூரி இணையத்தளத்தை தொடர்ந்து நிர்வகித்து வருகிறோம்.

* * * * * * * *

சங்கத்தின் நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்கள்

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 06.03.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 13 |
| 24.04.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 08 |
| 12.06.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 09 |
| 24.07.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 07 |
| 14.08.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 09 |
| 18.09.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 06 |
| 02.10.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 06 |
| 04.12.2004 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 09 |
| 08.01.2005 | சரஸ்வதி மண்டபம் 75 லொறன்ஸ் வீதி கொழும்பு 4 | 11 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பு ஆண்டில் நடைபெற்ற ஏனைய நிகழ்வுகள்

| திகதி | நிகழ்வு | இடம் | வரவு |
|---|---|---|---|
| 07.02.04 | ஆண்டுப் பொதுக் கூட்டம் | சரஸ்வதி மண்டபம் | 11 |
| 19.03.04 | புது வருட மலிவு விற்பனை | சரஸ்வதி மண்டபம் | 16 |
| 12.04.04 | இராப் போசன விருந்து | கிறீன்லண்ஸ் ஹோட்டல் | 25 |
| 03.07.04 | யாழ் நாதம் இதழ் 10 வெளியீடு | சரஸ்வதி மண்டபம் | 30 |
| 06.11.04 | ஒன்று கூடல் நிகழ்வு | மதுரா றெஸ்ரோரன்ஸ் | 25 |

- 1 -

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 01.00 மணியிலிருந்து 07.00 மணிவரை கொழும்ப 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற புது வருட மலிவு விற்பனை *(படம் 2: பின் உள்அட்டை)*

பிரதம அதிதிகள்: திரு திருமதி உதயகுமார். திரு உதயகுமார் St. Peters College Master ஆவார். திருமதி தயாநிதி உதயகுமார் எங்கள் கல்லூரிப் பழைய மாணவி ஆவார். இவர்கள் இருவரும் தமிச்சங்கத்தில் நடக்கும் கல்வி நிலையத்தை நிர்வகித்து நடத்துகிறார்கள்.

வரவேற்பு: திருமதி அபிராமி கயிலாசபிள்ளை பிரதம அதிதிகளுக்கு பழக்கொத்துக் கொடுத்து வரவேற்றார்.

புது வருட மலிவு விற்பனை ஒழுங்குகள்: இந்த மலிவு விற்பனையை ஒழுங்கு செய்யும் பொறுப்பை திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் ஏற்றுக்கொண்டார். செல்வி சிவமலர் சுப்பிரமணியமும் திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனும் அவருக்கு உதவியாக முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டனர்.

| | |
|---|---|
| திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் | சேலை, ஏனைய உடைகள் |
| செல்வி சிவமலர் சுப்பிரமணியம் | உணவுப் பொருட்கள் |
| திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் | பானங்கள் (Drinks) |

மலிவு விற்பனைக்கு பின்வருவோர் சிற்றுண்டி வகைகளையும் குளிர் பானங்களையும் கொண்டு வந்தார்கள்:-

| | |
|---|---|
| திருமதி அபிராமி கயிலாசபிள்ளை | சாண்ட்விச், பற்றிஸ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன் | கேக், தேசிக்காய்த் தண்ணீர் |
| திருமதி பொன்மலர் கந்தசாமி | கேசரி |
| திருமதி திலகா வீரசிங்கம் | கடலை வடை |
| செல்வி சிவமலர் சுப்பிரமணியம் | பருத்தித்துறை வடை |
| திருமதி மனோன்மணி அருணாசலம் | லட்டு |
| திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் | கேக் |
| திருமதி ருக்மணி அரசரட்ணம் | முறுக்கு, தேசிக்காய்த் தண்ணீர் |
| செல்வி திருவேணி குகபாலன் | மிக்சர் |

பின்வருவோர் மேசைகள் ஒழுங்கு செய்தனர்:

| | |
|---|---|
| திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன் | 2 |
| திருமதி சிவகாமி வீரவாகு | 2 |
| திருமதி வனிதா தர்மலிங்கம் | 1 |
| திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் | 1 |
| திருமதி சிவகாமி அம்பலவாணர் | 1 |
| திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம் | 0.5 |

மேசை ஒன்றிற்கு ரூபா 1,000 நன்கொடையாகத் தந்தார்கள்.

செல்வி சிவமலர் சுப்பிரமணியம் மரக்கறிகள் பழங்கள் ஒழுங்கு செய்தார்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை ஜாம் ஒழுங்கு செய்தார்.

செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர் மண்டப ஒழுங்குகள் எல்லாவற்றையும் செய்தார்.

* * * * * * * *

– 2 –

<u>2004ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 07.00 மணியிலிருந்து 09.00 மணிவரை கொழும்பு 4, Shrubbery Garden 3A இலக்கத்திலுள்ள Greenlands Hotel இல் நடைபெற்ற இராப்போசன விருந்து *(அட்டைப் படம்)*</u>

எங்கள் கல்லூரிப் பழைய மாணவியாகிய திருமதி லோகநாயகி அருளலிங்கம் (முன்பு செல்வி லோகநாயகி நவரட்ணம், சுப்பிரமணியம் சுவாமியின் பேத்தி) தற்பொழுது கனடாவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் மாறி மாறி வசிப்பவர் இங்கு விடுமுறையில் வந்திருந்தார். அவர் மற்றைய பழைய மாணவிகளைச் சந்திக்க விரும்புவதாகச் செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணரின் இல்லத்திற்குச் சென்றபோது தெரிவித்தார்.

எனவே அவரின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக கொழும்பு வாழ் பழைய மாணவிகளையும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் அழைத்து இராப்போசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து ஒன்றை Greenlands Hotel இல் வைக்க உத்தேசித்தோம்.

ஐக்கிய இராச்சியத்துக்கு சென்றிருந்த எங்கள் சங்க அங்கத்தவர்களுள் ஒருவராகிய திருமதி சந்திரா பரமேஸ்வரன் விடுமுறையில் இங்கு வந்திருப்பதாக திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் செயலாளருக்குத் தெரிவித்ததனால் திருமதி சந்திரா பரமேஸ்வரனையும் இராப்போசன விருந்திற்கு அழைத்தோம்.

இந்த நிகழ்வை Video Blossom புகைப்படம் எடுத்து உதவினார்கள்.

இராப்போசனத்துக்கு Greenlands Hotel இற்கு ரூபா 2,500/- செலவானது.

இறுதியில் திருமதி லோகநாயகி அருளலிங்கம், திருமதி சந்திரா பரமேஸ்வரன், திருமதி சிவகாமி அம்பலவாணர், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் ஆகியோரின் உரைகளுடன் இராப்போசன விருந்து இனிதே நிறைவுபெற்றது.

திருமதி லோகநாயகி அருளலிங்கத்துக்கு யாழ்நாதம் இதழ்கள் அன்பளிப்பாகக் கொடுத்தோம். அவர் இனி வரும் பிரதிகளிலும் ஒரு இதழில் ஒரு பிரதி வீதமாவது தங்கள் சங்கங்களுக்குக் கொடுத்தால் நல்லது என அபிப்பிராயம் தெரிவித்தார்.

* * * * * * * *

- 3 -

2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுகள்

1. உளவள நிபுணர் கெட்சி (Getsy) சண்முகத்துடன் சந்திப்பு *(படம் 3: பின் அட்டை)*
2. யாழ் நாதம் இதழ் 10 வெளியீடு
3. எங்கள் சங்க உறுப்பினர் பங்கு பற்றும் அரட்டையர் அரங்கம்

பிரதம அதிதி: உளவள நிபுணர் திருமதி கெட்சி சண்முகம். இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்சேவையில் நவசக்தி நிகழ்ச்சி மூலம் உளவள ஆலோசனைகளை வழங்கி வருபவர்.

பிரதம அதிதியை உதவிப் பொருளாளர் திருமதி விமலா மணிவாசகன் பழத்தட்டுக் கொடுத்து வரவேற்றார் *(படம் 4 பின் அட்டை)*.

நிகழ்வு பி.ப. 5.30 மணிக்கு திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கத்தினுடைய தேவாரத்துடனும் கல்லூரி கீதத்துடனும் ஆரம்பமாகியது. இதைத் தொடர்ந்து செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமை உரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வருடாந்த சஞ்சிகையாகிய யாழ்நாதம் இதழ் 10 வெளியிடப்பட்டது. இதழ் ஆசிரியை திருமதி சிவகாமி அம்பலவாணர் முதல்பிரதியை பிரதம அதிதி திருமதி கெட்சி சண்முகத்திடம் கையளித்தார். அடுத்த பிரதியை பிரதம அதிதி திருமதி கெட்சி சண்முகம் கல்லூரிப் பழைய பதில் அதிபர் திருமதி லீலா நாகரட்ணத்திடம் கையளித்தார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

சஞ்சிகை ஆசிரியர் திருமதி சிவகாமி அம்பலவாணர் பிரதிகளைச் சபையோருக்கு விநியோகம் செய்தார்.

யாழ்நாதம் இதழ் 10, நூறு பிரதிகள் செய்ததாக திருமதி சிவகாமி அம்பலவாணர் தெரிவித்தார். இதற்கு Risograph இற்கு ரூபா 5,600/- உம் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கு ரூபா 13,000/- உம் செலவானது.

புத்தக வெளியீட்டைத் தொடர்ந்து திருமதி கெட்சி சண்முகத்துடனான நேர் முகச் சந்திப்பு நடைபெற்றது. வருகை தந்திருந்தோர் உளவளம் சம்பந்தமாகக் கேட்ட கேள்விகளுக்கு திருமதி கெட்சி சண்முகம் தகுந்த பதில்களை அளித்து அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். இதனால் கவரப்பட்ட சங்க உறுப்பினர்கள் இன்னொரு நாளும் அவருடன் நேர்முகச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

அடுத்து சங்க அங்கத்தவர்கள் பங்குபற்றிய அரட்டையர் அரங்கம் நடைபெற்றது (*படம் 3 படம் 4: முன் உள்அட்டை*) அரட்டையர் அரங்கத்தைச் செல்வி சற்சொரூபவதி நாதன் நடத்தினார்.

அரட்டையர் அரங்கத்தின் பொருள் “இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறதா?”

பேச்சாளர்கள்:

| இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படுகிறது. | இன்றைய அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு உரிய சூழல் காணப்படவில்லை |
|---|---|
| திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம் | திருமதி தயாநிதி உதயகுமார் |
| திருமதி ஞானேஸ்வரி ஞனசேகரம் | திருமதி சந்திரா பரமேஸ்வரன் |
| திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் | திருமதி விமலா மணிவாசகன் |
| திருமதி மஞ்சுளா ஜீவலிங்கம் | செல்வி நாகநந்தினி சண்முகநாதன் |

அரட்டையர் அரங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்தாலும் பேச்சாளர்கள் தம் திறமையினால் சபையினரைக் கவர்ந்தனர். *(குறிப்பு: பக்கங்கள் 32, 33, 34, 35, 36)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளரின் நன்றியுரையுடனும் திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கத்தின் தேவாரத்துடனும் நிகழ்வு இரவு 8.00 மணிக்கு இனிதே நிறைவேறியது.

* * * * * * * *

– 4 –

2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை மதுரா மட்ராஸ் வூட்லண்ஸ் றெஸ்ரோரன்ர், 185, ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 இல் இராப்போசனத்துடன் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வு *(படம் 1: பின் உள்அட்டை)*

இந்நிகழ்விற்கு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக சிறப்பு பேராசிரியர் திருமதி ஞானாம்பிகை குலேந்திரன் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார். உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் பூச்செண்டு கொடுத்து பிரதம அதிதியை வரவேற்றார்.

இந்நிகழ்விற்கு 25 பேர் வருகை தந்திருந்தனர். பிரதம விருந்தினர் உரை, தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் உரை, உபதலைவி செல்வி சற்சொரூபவதி நாதனின் உரை, செயலாளரின் நன்றியுரை ஆகியவற்றுடன் இராப்போசனம் சிறப்பாக நிறைவேறியது.

தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் தாராள மனப்பான்மையால் நிகழ்விற்கு வந்தோர் அனைவரும் திருப்திகரமாக போசனம் அருந்தி மகிழ்வுற்றனர்.

இந்நிகழ்வின் செலவு விபரங்கள் பின்வருமாறு:

| | வரவு | செலவு |
|---|---|---|
| 23பேர் 250ரூபாப்படி | 5,750 | |
| தலைவியின் அன்பளிப்பு | 5,074 | |
| உணவு | | 10,324 |
| பூக்கள் | | 500 |
| | 10,824 | 10,824 |

இந்நிகழ்விற்கான புகைப்படங்களை தலைவியின் மருமகன் செல்வன் வேணுகோபன் எடுத்து உதவினார். இந்நிகழ்விற்கான ஆரம்ப ஒழுங்குகளை செல்வி வத்சலா நாகலிங்கமும் திருமதி மஞ்சுளா ஜிவலிங்கமும் திருமதி சிவகாமி அம்பலவாணரும் செய்து உதவினார்கள்.

* * * * * * * *

– 5 –

கல்லூரியின் 2003ஆம் ஆண்டுச் சிறந்த மாணவியான செல்வி நிலக்ஷி மகாதேவாவிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விருது வழங்கினோம் *(படம் 1: பின் அட்டை)*

2004 ஆம் ஆண்டுச் சிறந்த மாணவியாக செல்வி துளசி கந்தசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

* * * * * * * *

– 6 –

2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதியும் 10ஆம் திகதியும் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றன. கலைத்திறன் மிக்க யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் நாட்டிய நாடகத்தில் முதல் இடம் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை ஈட்டியுள்ளனர்.

# முதலாம் இடம்

## அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டி – 2004

## நாட்டிய நாடகம்

## யா / யாழ். இந்து மகளிர் கல்லூரி

## பாரதியின் பாஞ்சாலி சபதம்

### பங்கு பற்றிய மாணவிகள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. செல்வி கஜமுகி ஜெயபாலசிங்கம் | – | பாரதி |
| 2. செல்வி சிவச்செல்வி கனகசபாபதி | – | பாஞ்சாலி |
| 3. செல்வி செந்துஷா செல்வரட்ணம் | – | துச்சாதனன் |
| 4. செல்வி நிஜாந்தி சிவஞானசுந்தரம் | – | துரியோதனன் |
| 5. செல்வி சாம்பவி சிவதாஸ் | – | சகுனி |
| 6. செல்வி ரோகினி யோகலிங்கம் | – | பீஷ்மர் |
| 7. செல்வி ஜினித்தா சிவசுப்பிரமணியம் | – | தர்மர் |
| 8. செல்வி நிரூதா தங்கராஜா | – | நடனமாந்தர் |
| 9. செல்வி பிருந்தா முருகதாசன் | – | நடனமாந்தர் |
| 10. செல்வி ஜெவித்தா ஜெயபாலசிங்கம் | – | நடனமாந்தர் |
| 11. செல்வி விசாந்தினி கனகராஜா | – | நடனமாந்தர் |
| 12. செல்வி வர்மிளா பாலச்சந்திரன் | – | நடனமாந்தர் |

### அணிசெய் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நட்டுவாங்கம் | – | செல்வி பிரபாசினி சுந்தரலிங்கம் |
| வாய்ப்பாட்டு | – | திருமதி சக்திதேவி சிவகுமார் |
| வாய்ப்பாட்டு | – | திருமதி தேவமனோகரி உருத்திரசிங்கம் |
| வயலின் | – | திருமதி குமுதினி உருத்திரகுமாரன் |
| மிருதங்கம் | – | செல்வன் மகேந்திரன் லோகேந்திரன் |
| ஓகன் | – | செல்வன் சிவநாதன் ரஜீவன் |
| நாட்டிய நாடக எழுத்து உருவாக்கம் | – | கலாநிதி ம. குழந்தை சண்முகலிங்கம் |
| நாட்டிய அமைப்பும் நெறியாள்கையும் | – | செல்வி பிரியதர்ஷினி பேரின்பநாயகம் |
| ஒப்பனை உதவியாளர் | – | செல்வி குகாஷினி செல்லையா |
| ஒப்பனை உதவியாளர் | – | செல்வி குகன்யா ஜெயபாலசிங்கம் |

இந்த மாணவர்கள் கொழும்பிற்கு வருகை தந்தபோது அவர்களை திருமதி அபிராமி கயிலாசபிள்ளையின் வீட்டில் தங்கவைத்து உபசரித்தோம்.

– * –

இரண்டாம் இடம்
அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டி—2004
தனி நடனம்

யா / யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

செல்வி சரவண்யா தெட்சணாமூர்த்தி

– * –

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை: யா / யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடமும் வலய மட்டத்தில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளது.

* * * * * * * *

– 7 –

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி: எங்கள் சங்கத்தின் அன்பளிப்பாக ரூபா 500,000/-த்தை சட்ட நிபுணர் திரு. தேவசேனாதிபதியின் உதவியுடன் நம்பிக்கைப் பத்திரம் தயாரித்து யாழ் தேசிய சேமிப்பு வங்கி நிதியம் ஒன்றில் வைப்பீடு செய்தோம். அதில் இருந்து வரும் வட்டிப்பணத்தை எங்கள் கல்லூரியில் உள்ள திறமை மிக்க வறுமையான மாணவிகளுக்கு பயன்படுத்துமாறு ஒழுங்கு செய்தோம்.

2005ஆம் ஆண்டிற்கு 6 மாணவிகளைத் தெரிவு செய்து ஒவ்வொரு மாணவிக்கும் ரூபா 500/- மாதம் தோறும் கொடுப்பதாக அதிபர் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டிற்கான உதவிப்பணம் பெறுவோர் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி பிரேவீனா பரமேஸ்வரன் 7 டி
செல்வி தீபிகா ஸ்ரீஸ்கந்தராஜா 7 ஈ
வஜிதா தவராசா 8 பி
செல்வி மயூரிகா வாசுதேவன் 10 எவ்
செல்வி ரஜித்தா செல்வராசா 11 ஏ
செல்வி மயூரதி குகனேஸ்வரன் 6 ஈ

* * * * * * * *

- 8 -

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி: இந்த வருடம் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை வெள்ளிவிழாக் கொண்டாடுகிறது. எனவே எங்கள் சங்கத்தின் அன்பளிப்பாக ரூபா 100,000/-த்தை சட்ட நிபுணர் திரு. தேவசேனாதிபதியின் உதவியுடன் நம்பிக்கைப் பத்திரம் தயாரித்து யாழ் தேசியசேமிப்பு வங்கி நிதியம் ஒன்றில் வைப்பீடு செய்தோம். அதில் இருந்து வரும் வட்டிப்பணத்தை ஆரம்பப் பாடசாலையில் உள்ள திறமை மிக்க வறுமையான மாணவிகளுக்கு பயன்படுத்துமாறு ஒழுங்கு செய்தோம்.

2005ஆம் ஆண்டிற்கு 2 மாணவிகளைத் தெரிவு செய்து ஒவ்வொரு மாணவிக்கும் ரூபா 300/- மாதம் தோறும் கொடுப்பதாக ஆரம்பப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டிற்கான உதவிப்பணம் பெறுவோர் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

செல்வி இந்துஜா சந்திரசேகர்
செல்வி தனுஜா தனராஜ்

* * * * * * * *

இணையத்தளம்: எங்கள் சங்கம் அமைத்த www.jhlc.lk என்ற இணையத்தளம் எங்கள் கல்லூரிக்கும், வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகளுக்கும், பழைய மாணவிகள் சங்கங்களுக்கும் ஒரு தொடர்பு சாதனமாக உள்ளது.

கனடா செயற்குழுப் போஷகர் செல்வி நல்லம்மா குழந்தைவேலு விடுதலையில் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் இணையத்தளம் மூலம் எல்லோருடனும் தொடர்பு கொள்பவர். இவர் இங்கு வந்திருந்தபோது எங்கள் கல்லூரிக்குச் சென்றிருந்தார். அச்சமயம் தான் 2 Dollar விதம் சேமித்த பணத்திலிருந்து கல்லூரிக்கு ரேடியோ சி.டீ. player ஆங்கிலக் கல்விக்கு audio cassettes என்பவற்றை தனது அன்பளிப்பாகக் கொடுத்தார். இவர் கனடாவில் ஆசிரியையாகக் கடமையாற்றுவதால் அங்குள்ள மாணவிகளுக்கு ஆங்கிலக் கல்வி கற்பதற்கு இருக்கும் வசதிகள் எங்கள் கல்லூரி மாணவிகளுக்கும் இருக்கவேண்டும் என்னும் விருப்பம் உடையவர்.

* * * * * * * *

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வ.கீ.பி.பா.ப.மா.சம்) ஒரு அங்கத்துவ பாடசாலையாக இருக்கின்றது. எங்கள் சங்கத்தை இந்த ஆண்டு (2004) பின்வருவோர் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
செல்வி சற்சொரூபவதி நாதன்
திருமதி சிவகாமி அம்பலவாணர்
திருமதி விமலா மணிவாசகன்
திருமதி பொன்மலர் கந்தசாமி

அத்துடன் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை சம்மேளனத்தின் பொருளாளராகவும் திருமதி சிவகாமி அம்பலவாணர் செயற்குழு உறுப்பினராகவும் கடமையாற்றினார்கள்.

எங்கள் சங்க அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கல்லூரி அதிபர் பவளவிழாப் புத்தக பிரதிகள் 10 ஒரு அன்பர் மூலம் அனுப்பியிருந்தார். நான்கு அங்கத்தவர்கள் ஒவ்வொரு பிரதிகள் ரூபா 250 கொடுத்து வாங்கினார்கள்.

எங்கள் சங்க வளர்ச்சிக்கு ஆர்வத்துடன் உழைத்து வந்த திருமதி திலகா வீரசிங்கம் இவ்வருட இறுதியில் ஐக்கிய இராச்சியத்தில் குடியேறுவது எங்கள் சங்கத்திற்கு ஒரு இழப்பாகும். எனினும் அவரின் சேவை ஐக்கிய இராச்சியத்தில் இருந்து எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

எங்கள் சங்கத் தேவைகள் எல்லாவற்றிற்கும் இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபையை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை (Audit) செய்து தந்த திரு சச்சிதானந்தனுக்கும் இதற்கு உதவிய திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்க அலுவல்களில் என்றும் எனக்கு உதவியாக இருந்த எங்கள் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளைக்கும், உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனுக்கும், பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியத்திற்கும், நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் வளர்ந்து அரும்பணியாற்ற நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையாரைத் துதிக்கின்றேன்.

*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*கௌரவ செயலாளர்*
05.02.2005

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்று கூடல் நிகழ்வு : பிரதம அதிதி திருமதி ஞானாம்பிகை குலேந்திரன் சொற்பொழி வாற்றுகின்றார். மற்றும் சங்கத் தலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை உப தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், செயலாளர் திருமதி சிவகாமி அம்பலவாணர், பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

குறிப்பு: பக்கம் 60.

**மலிவு விற்பனை**

பிரதம அதிதிகளாக வருகை தந்த திரு. உதயகுமார் - திருமதி தயாநிதி உதயகுமாருடன் வந்திருந்த அங்கத்தவர்கள்.

குறிப்பு : பக்கம் 56.





கனடா செயற்குழுப் போஷகர் செல்வி நல்லம்மா குழந்தைவேலு கல்லூரி அதிபருடன்.

குறிப்பு: பக்கம் 63

திருமதி தையல்நாயகி கருணானந்தன்

குறிப்பு: பக்கம் 40.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி நிலக்ஷி மகாதேவா எங்கள் சங்கம் 2003ஆம் ஆண்டு சிறந்த மாணவிக்கு அளித்த பொன்விருதைப் பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி தவமணி விக்னேஸ்வரனிடம் இருந்து பெறுகின்றார்.

குறிப்பு: பக்கம் 13, பக்கம் 60.



"நன்றி சொல்ல வந்தேன்".
திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்

குறிப்பு: பக்கம் 49.



**யாழ்நாதம் இதழ் 10 வெளியீடு.**

திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம், திருமதி கெட்சி சண்முகம், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம், திருமதி விமலா மணிவாசகன், திருமதி சிவகாமி அம்பலவாணர்.

குறிப்பு: பக்கம் 58.



பிரதம அதிதி திருமதி கெட்சி சண்முகத்திற்கு உப பொருளாளர் திருமதி விமலா மணிவாசகன் பழத்தட்டுக் கொடுக்கின்றார்.

குறிப்பு: பக்கம் 58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COVER DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD. COLOMBO 13. TEL: 2330195